வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 19.07.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 225 | பக்கங்கள் : 16

ஜனாதிபதி தெரிவில் ஆதரவு யாருக்கு

# கூட்டமைப்பு கூடி ஆராய்வு; இன்று முடிவு எட்டப்படலாம்!

- கூட்டத்தினிடையே சஜித் பிரசன்னம்
- ரணில், புறக்கணிப்புக்கும் ஆதரவு

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதி பதவிக்காக பாராளுமன்றத்தில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று கொழும்பில் அதன் தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் கூடி ஆராய்ந்தனர். நேற்று மாலை நீண்டநேரம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் இறுதித் தீர்மானம் எதுவும் எட்டப்படவில்லை என்று அறிய வருகின்றது.

இந்நிலையில், இன்றைய தினமும் மீண்டும் கூடி ஆராய்ந்து இறுதி முடிவு எட்டு வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

15

## கட்சி ஆரம்பித்தார்கள் போராட்டக்காரர்கள்!

கொழும்பு, ஜூலை 19

மக்கள் போராட்டங்களை ஒருங்கிணைந்து நடத்திய கட்சி சார்பற்ற செயல்பட்டாளர்கள் “மக்கள் போராட்ட பிரஜைகள்“ என்ற புதிய அரசியல் கட்சியை பதிவு செய்வதற்கான ஆவணங்களை தேர்தல் ஆணையத்திடம் வழங்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு நேற்று திங்கட்கிழமை சென்ற அவர்கள், அதன் தலைவரிடம் ஆவணங்களை கையளித்தனர் என்று கூறப்படுகின்றது.

சில கும்பல்கள் போராட்டத்தை துஷ்பிரயோகம் செய்ய முயற்சிக்கின்றன. மக்களின் விருப்பங்களுக்காக தொடர்ந்தும்

15

## போராட்டக்காரர்களுக்கு வெளிநாட்டிலிருந்து நிதி?

### சி. ஐ. டி. விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 19

காலிமுகத்திடல் போராட்டத் தளமான கோட்டா கோ ஹோமின் மூன்று முன்னணி செயல்பாட்டாளர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து மூன்று உள்ளூர் வங்கிக் கணக்குகள் மூலம் 4.5 கோடி ரூபாயைப் பெற்றனர் என்பது தொடர்பான விசாரணையை

15

## கோட்டாபயவை வெளியேற சிங்கப்பூர் கோரவில்லையாம்!

கொழும்பு, ஜூலை 19

சிங்கப்பூரை விட்டு வெளியேறுமாறு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அந்த நாட்டு அரசாங்கம் கேட்கவில்லை என்று அவரின் பிரத்தியேக செயலாளர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை 14 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளி யேறுமாறு அந்த நாட் டின்

15

## ஜனாதிபதி தெரிவு போட்டி; இன்று வேட்புமனு தாக்கல்!

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு புதியவரை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் இன்று வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது.

அரசமைப்பு விதிகளின்படி இடைக்கால ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராகவே இருக்கலாம்.

இதற்கான தேர்தல் பாராளுமன்றில் நடத்தப்பட்டு 50வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெறுபவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார்.

ஜனாதிபதி பதவிக்கு தற்போது பதில் ஜனாதிபதியாக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, சுயாதீனமாக இயங்கும் பொதுஜன பெரமுன கட்சியின் டலஸ்

15

ஜனாதிபதி வேட்பாளர்களுக்கான

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் வரைவு இன்றே இறுதியாகும்!

யாழ்ப்பாணம், ஜூலை 19

ஜனாதிபதி தெரிவில் யாரை ஆதரிப்பது என்பதற்காக தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய வரைவு இன்றைய தினமே இறுதியாகும் என்று ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் கு. சுரேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி தெரிவில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகள் நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்தன. நேற்றைய சந்திப்பு காலை, மாலை என இரு நேரங்களில் இணைய வழியில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதில், ஆறு கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

15

## ஜனாதிபதி தெரிவு வாக்கெடுப்பு த. தே. ம. முன்னணி பங்கேற்காது!

கொழும்பு, ஜூலை 19

ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக பாராளுமன்றில் நாளை புதன்கிழமை நடக்கவுள்ள தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பங்கேற்காது என்று அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் கொழும்பில் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், ஜனாதிபதி தெரிவுக்கான போட்டியில் உள்ளவர்கள் எவரும் தமிழ்த் தேசிய மக்களின் அரசியல் அபிலாசைகளை எந்த ஒரு விதத்திலும்

15

## நாட்டில் நேற்று முதல் பொது அவசர நிலை!

கொழும்பு,ஜூலை. 19

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கையில் பொது அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் வெளியிட்டுள்ள அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில், பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் நேற்று முதல் இலங்கை முழுவதும் நடைமுறைக்குவரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கைப் பாதுகாத்தல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு

15

## இலங்கை மக்களுக்காக பாப்பரசர் பிரார்த்தனை

வத்திக்கான், ஜூலை 19

இலங்கை மக்களுக்காக பிரார்த்தனையில் ஈடுபடுவதாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் உறுதியளித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வின்போது கருத்துரைத்த அவர், மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் வாழ்வாதாரங்களைப் பறித்தமையே மக்கள் எழுச்சிக்கு வழிவகுத்தது என்று குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஊழல் மற்றும் வேரூன்றியிருக்கும் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டுகோள்

15

## பேருந்து கட்டணம் இன்று குறையும்!

கொழும்பு, ஜூலை 19

இன்று செவ்வாய்க்கிழமை நாளை நள்ளிரவு முதல் பேருந்து கட்டணங்களை குறைக்குமாறு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள்

15

## ஜனாதிபதி, பிரதமரை நியமிக்க பொது உடன்பாட்டை எட்டுங்கள்!

### கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்து

கொழும்பு, ஜூலை. 19

அரசியல் வேறுபாடுகள் மற்றும் நிகழ்ச்சி நிரல்களை புறந்தள்ளி, இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்க பொது உடன்பாடு ஒன்றுக்கு வருமாறு அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

நியமிக்கப்படவுள்ள ஜனாதிபதி மற்றும் பிரதமர் தொடர்பில் அனைத்து அரசியல் தலைவர்களும் இதுவரையில் எந்தவொரு பொது இணக்கப்பாட்டுக்கும் வரவில்லை என அந்த பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் - நிலவும் நெருக்கடியான

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

அரசியலில் நண்பரும் இல்லை பகைவரும் இல்லை என்பார்கள். இன்று நல்ல நண்பர்களாக இருந்தவர்கள் நாளை பகைவர்களாவதும் இன்று பகைவர்களாக இருந்தவர்கள் நாளை நண்பர்களாவதும் நடக்கலாம்.

மகிந்த ராஜபக்ஷ இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் தொடர்ந்து வெற்றிபெற்று மூன்றாவது தடவையாகவும் போட்டியிட்டபோது, அவரைத் தோற்கடிப்பதற்காக ரணில், இரண்டாவது தடவையாகவும் போட்டியிடுவதைத் தவிர்த்தார்.

மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக்குவதில் அரசியல் சித்துவிளையாட்டு நடத்தியவர் மங்கள சமரவீர. அவருடன் அந்த ஆட்டத்தில் நமது சுமந்திரனும் சேர்ந்திருந்தாரெனக் கூறப்படுவதுண்டு. அதனால்தான் அந்தத் தேர்தல் முடிந்த பின்னர் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் முதல்தடவையாக போட்டியிட்ட சுமந்திரன், பின்னர் அடுத்த ஐந்து ஆண்டுகளும் ரணிலின் விசுவாசியாக, அவரைக் காப்பாற்றுவது மாத்திரமே தன்வேலை என்று ஓடிஓடி பணியாற்றினார்.

அப்போதெல்லாம் ரணில் சேர், அவருக்கு தேவைப்பட்டாரா அல்லது செய்நன்றி மறவாது உதவினாரா என்பது அவருக்கு மாத்திரமே தெரிந்தது.

ரணில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் படுதோல்வி அடைந்த பின்னர், தனது நண்பர் ஒருவர் அடைந்த படுதோல்வி அவருக்கு எந்தவித கவலையையும் ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை.

அதனால்தானோ என்னவோ சிலவேளைகளில் ரணிலை ஏளனம் செய்வதுபோல, அவர் தோல்வியடைந்த தலைவர் என்று பகிரங்கமாகவே கூறினார்.

ஆனால், ரணில் தோல்வியடைந்து வீட்டில் இருந்த போது, அவரை பேட்டிகண்ட சமுதித்த என்ற ஊடகவியலாளருக்கு அவர் சொன்னது இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

இருபத்து நான்கில் அதாவது அடுத்த தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சியமைக்கும் என்று அடித்துக் கூறினார் ரணில். அவர் அப்படிக் கூறியது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக. ஆனால், அதற்கு முன்னரே அவரின் ஆட்டம் தொடங்கிவிட்டது.

அரசியலில் நண்பனும் இல்லை பகைவனும் இல்லை என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், நண்பர்களாக இருந்தவர்கள் பகைவர்களாக மாறிவிட்டால், அந்தப் பகை மிகக் கடுமையானதாக இருக்கும் என்பதும் தவிர்க்க முடியாததோ என்னவோ. அதுவும் அரசியலில் ஒரு "நரி" என்று வர்ணிக்கப்படும் ரணில், தன்னைச் சீண்டிப் பார்ப்பவர்களை எப்படி நடத்துவார் என்பதற்கு அண்மையில் நடந்த சம்பவம் ஒன்று சான்று.

கடந்த வாரம் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், நீண்ட மேசையைச் சுற்றி இரண்டு வரிசைகளில் கதிரைகள் போடப்பட்டிருந்தன. முதலாவது வரிசையில் வந்து அமர்ந்திருந்தார் நமது தமிழ் எம். பி. ஒருவர். கூட்டத்துக்கு வந்துசேர்ந்த ரணில், அவர் முன்வரிசையில் இருப்பதைக் கண்டதும் ஓர் உதவியாளரை அழைத்து அந்த எம். பியை பின்வரிசையில் அமருமாறு சொல்லச் சொல்லியிருக்கிறார்.

அந்த உதவியாளர் நமது எம். பியிடம் அதனைச் சொல்ல, தான் கூட்டமைப்பின் சார்பில் கலந்துகொள்வதாகவும் அதனால் தான் முன்வரிசையில்தான் அமர்வேன் என்றும் சொல்லியிருக்கிறார்.

தகவல் ரணிலுக்கு சொல்லப்பட, இந்தக் கூட்டத்துக்கு கூட்டமைப்பு அழைக்கப்படவில்லை என்றும் கூட்டமைப்பிலுள்ள ஒவ்வொரு கட்சிகளையும் தனித்தனியாக அழைத்திருப்பதாகவும் எனவே, அவர் பின்வரிசையில்தான் உட்கார வேண்டும் என்றும் ரணில் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறார். அதற்கும் நம்மவர் மசிந்துவிடவில்லை. தான் கூட்டமைப்பிலுள்ள தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் வந்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அதுவும் தெரியும், ஆனால் அது கட்சித் தலைவர்களுக்கு மாத்திரமே முன்வரிசை ஒதுக்கப்பட்டுள்ளதால் கட்சியின் சார்பில் கலந்துகொள்கின்ற அவர் பின்வரிசையில்தான் உட்கார வேண்டும் என்று "கட்டளை" இடப்பட்டதாம்.

நமது எம். பி. பின்வரிசையில் போய் அமர்ந்த பின்னர்தான் கூட்டமே தொடங்கியது.

இந்த சம்பவங்களைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு கட்சித் தலைவர் சொன்னார், ரணில் பற்றி தான்கூட கருத்துச் சொல்லாமல், நேற்று அரசியலுக்கு வந்த ஒரு பொடிப்பயல் ஒருத்தனைக் கொண்டு ரணிலை சீண்டிப்பார்த்தால் மனுசன் விடுவாரோ? சந்தர்ப்பம் பார்த்து இனி இப்படித்தான் ரணிலர் விளையாடுவார் என்றார்.

தட்டித்தவறி ரணில் நாளை ஜனாதிபதிக்கான தேர்தலில் வெற்றிபெற்றால், ஆட்டம் இன்னும் உற்சாகம் பெறுமோ என்னவோ?!

**- ஊர்க்குருவி**

*ஜனாதிபதி தெரிவு:*

# ஆதரவளித்தால் சிறுபான்மையினரின் பிரச்னைத் தீர்வை உத்தரவாதமாக்குக!

## சமத்துவக் கட்சி ஆலோசனை

*யாழ்ப்பாணம், ஜூலை 19*

இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் போட்டியில் தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், குறிப்பாகத் தமிழ்த் தரப்புக் கட்சிகள் மிகப் பொறுப்போடும் நிதானத்தோடும் செயல்பட வேண்டும். போட்டியில் ஈடுபடும் வேட்பாளர்களிடம் சிறுபான்மை தேசிய இனங்களின் அபிலாசைகள், பிரச்னைகளுக்கான தீர்வுக்கான உத்தரவாதத்தை கோர வேண்டும் என சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமார் இது குறித்து விடுத்த அறிக்கையில்,

நாட்டின் அரசியல் பொருளாதார நிலவரம் மிக மோசமான அளவுக்கு நெருக்கடிக்குள்ளாகி, மக்களுடைய நாளாந்த வாழ்க்கையே பெரும் சவாலாகியிருக்கிறது. வரலாற்றில் என்றும் இல்லாத அளவுக்கு எதிர்காலம் எப்படி அமையும் என்ற கேள்வி எழுந்துள்ளது. இதற்கு எவரிடத்திலும் பதிலைக் காணமுடியவில்லை. இதனால் மக்கள் போராட்டம் வலுப்பெற்று நிலையான அரசியல், பொருளாதார மாற்றத்தைக் கோரிநிற்கிறது.

இந்த நிலையிலும் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தென்னிலங்கை அரசியல் கட்சிகள் உட்பட தமிழ், முஸ்லிம், மலையகக் கட்சிகள் அனைத்தும் அரசியல் குழப்பத்திலும் வழமையான சூதாட்டத்திலுமே ஈடுபடுகின்றன. இது நாட்டில் மேலும் பல நெருக்கடிகளை உருவாக்கி, மக்களுக்கு எதிரான போக்கையே வளர்ப்பதாக அமைகிறது. இதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இதேவேளை இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியல் நாடகங்களையும் கட்சி இலாபங்களையும் கைவிட்டு, மக்களுக்கான அரசியல் நடவடிக்கைகளில் அனைத்துத் தரப்பினரும் பொறுப்பாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இல்லையென்றால் தொடர்ச்சியாக நடந்து வரும் பொறுப்பற்ற அரசியல் அதிகாரத்துக்கு எதிராக மக்கள் போராடுவதைத் தவிர்க்க முடியாதிருக்கும்.

இந்த அரசியல் சூழலில் நடைபெறவுள்ள இடைக்கால ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் போட்டியில் தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள், குறிப்பாகத் தமிழ்த் தரப்புக் கட்சிகள் மிகப் பொறுப்போடும் நிதானத்தோடும் செயல்பட வேண்டும். போட்டியில் ஈடுபடும் வேட்பாளர்களிடம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் அபிலாசைகள், பிரச்னைகளுக்கான தீர்வை முன்வைக்கும் வகையிலான அழுத்தத்தை அவை கோர வேண்டும். எவருக்காவது ஆதரவை வழங்குவதாக இருந்தால் அவை இதற்கான உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

வரலாற்றுச் சந்தர்ப்பங்களை தொடர்ந்தும் இழந்து வரும் நிலை மேலும் தொடரக் கூடாது. தமிழ் மக்கள் எப்போதும் தேசிய நெருக்கடி, இன நெருக்கடி என இரட்டை நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர் என்பதை உணர்ந்து அனைத்துத் தரப்பும் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்களும் புத்திஜீவிகளும் ஊடகங்களும் இதற்கான அழுத்தத்தை இந்தக் கட்சிகளுக்கு அளிப்பது அவசியமாகும் - என்றுள்ளது. (ஐ)



## உரும்பிராயில் ஆடிப் பிறப்பு விழா!

*யாழ்ப்பாணம், ஜூலை 18*

ஆடிப்பிறப்பு நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை ஆடிப்பிறப்பைத் தமிழர் பண்பாட்டின் திருநாளாக உரும்பிராயில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் கொண்டாடியுள்ளது.

உரும்பிராய் கிழக்கு பாரதிதாசன் சனசமூகநிலைய முன்றலில் நடைபெற்ற இந்த விழாவில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், கலை - இலக்கிய அணியின் துணைச் செயலாளர் கை. சரவணன் ஆகியோருடன் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கன் கலந்து கொண்டிருந்தார்.

திருமதி ரேணுகா அன்ரன் குமார் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் ஆடிக் கூழும் கொழுக்கட்டையும் பரிமாறப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களுக்குத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தால் பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டன.

தமிழர்களுக்கே உரித்தான ஒரு பண்பாட்டு அடையாளமான ஆடிப்பிறப்பும் அது சார்ந்த கொண்டாட்டங்களும் தற்போது அருகிவந்துள்ளன. இந்நிலையில், மீளவும் அதனை வெகுசனமயப்படுத்தும் நோக்கிலேயே தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பொதுமக்களுடன் இணைந்து ஆடிப்பிறப்பைச் சிறப்பான முறையில் கொண்டாடியுள்ளது.

## சொற்பொழிவுகள்

*யாழ்ப்பாணம், ஜூலை 18*

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் நடத்தப்படும் வாராந்த சிறப்புச் சொற்பொழிவு கோயிலின் சண்முகவிலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில் தலைமை உரையை பரிபாலன சபைத் தலைவர் த. சோதிலிங்கம் ஆற்றுவார்.

சிறப்புச் சொற்பொழிவை சைவப்புலவர் சி.கா. கமலநாதன் "ஆடி அமவாசை விரத மகிமை" என்ற தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

■ ■ ■

*யாழ்ப்பாணம், ஜூலை 18*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டில் அவர், குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக நடத்தப்படும் வாராந்த சொற்பொழிவும் - மாதந்த நாயன்மார் குருபூஜை நிகழ்வு கனடாவின் ரொறன்ரோவில் வசிக்கும் சிவஸ்ரீ பால. திருகுணானந்தக் குருக்களின் அனுசரணையில் நடக்கிறது.

இந்த நிகழ்வின் வரிசையில், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் 30ஆவது சொற்பொழிவு ஆவரங்கால் அருள் முருகன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை மாலை 3.30 மணிக்கு சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இதில், "நாவலர் பெருமானின் வாக்கும் வாழ்வும்" எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் க. கயிலைநாதன் சொற்பொழிவாற்றுவார். நிறைவில் வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கு பாராட்டு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
19.07.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆடி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# தீர்மானகரமான தருணம்?

நாளை இடம்பெறவுள்ள ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பு, இலங்கைத் தீவின் அடுத்து வரவுள்ள இரண்டு ஆண்டுகளை தீர்மானிக்கவுள்ளது. மும்முனை போட்டிகளுக்கு மத்தியில், ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகப்பெரும, சஜித் பிரேமதாஸ ஆகியோர் போட்டியிடுகின்ற நிலையில், யார் ஜனாதிபதியாக வரப் போகின்றார் என்பதில் குழப்பங்கள் உண்டு.

அதிக பெரும்பான்மையை கொண்டிருக்கும், சிறீலங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்திருக்கின்ற நிலையில், பொதுஜன பெரமுனவிற்குள் இரு அணிகள் உருவாகியிருப்பதான தோற்றமொன்றும் தெரிகின்றது. ஆனால், டலஸ் அழகப்பெருமவுக்கான ஆதரவு எந்த நிலையிலுள்ளது என்பதைப் பொறுத்தே நிலைமைகள் மாற்றமடையும். இதேவேளை ஆளும் தரப்புக்குள் இரண்டு அணிகள் உருவாகியிருக்கின்ற நிலையிலேயே, சஜித் பிரேமதாஸ தேர்தலில் போட்டியிடுகின்றார்.

தேர்தலின் முடிவுகள் தொடர்பில் எவ்வித கவலையுமின்றி, ரணில் ஒரு பதில் ஜனாதிபதியாக தனது செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். எந்த நம்பிக்கையின் அடிப்படையில் இதனை செய்கின்றார்? பொதுஜன பெரமுனவைப் பொறுத்தவரையில், ஜீ. எல். பீரிஸ் அதன் தலைவராக இருந்தாலும்கூட, அதனை இயக்குபவர்கள் ராஜபக்ஷக்கள். ராஜபக்ஷக்கள் வீழ்சியுற்றிருந்தாலும்கூட, பீரிஸ் போன்றவர்களின் கதைகளைக் கேட்டு இயங்கக் கூடிய நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களா என்பதும் ஒரு கேள்வி.

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் அவர்களின் பிரதான பிரச்னை பாதுகாப்பு. அதனை உறுதி செய்யக் கூடிய வல்லமை யாருக்கு உண்டு? இப்போது ராஜபக்ஷக்களால் முடியாது. ஏனெனில், ராஜபக்ஷக்களின் பாதுகாப்பே ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் ஓர் ஆளுமைமிக்க நபர் அவர்களுக்குத் தேவை. இன்றைய சூழலில் அவர்களுக்கு முன்னாலிருக்கும் ஒருவர் ரணில்தான். ஒருவேளை இதனை கருத்தில் கொண்டுதான், ரணில் அமைதியாக இருக்கின்றாரா?

ஒருவேளை ரணில் விக்கிரமசிங்க ஏதேனும் உள்சதிகளால் தோற்கடிக்கப்பட்டாலும்கூட, ரணிலைப் பொறுத்தவரையில் அது ஒரு தோல்வியாக இருக்கப் போவதில்லை. ரணிலை பொறுத்தவரையில் இழப்பதற்கு எதுவுமற்ற ஒருவரின் நிலையிருப்பவர். ஆனால், நிலைமைகளை அவதானித்தால் நாளை இடம்பெறப்போகும் வாக்கெடுப்பு இலங்கைத் தீவின் எதிர்காலத்தைத் தீர்மானிக்க வல்லது. ஒருவேளை டலஸ் அழகப்பெரும வெற்றிபெற்றால், அவரால் எந்தளவு நிலைமைகளை சமாளிக்க முடியுமென்பது பெரிய கேள்விக்குறி. டலஸ் அழகப்பெரும இன்றைய நெருக்கடி நிலைமையை சமாளிக்கக்கூடிய ஒருவரல்ல என்பதே பலரதும் பார்வை.

இந்த பின்புலத்தில் நோக்கினால், நாளை வெளிவரப் போகும் முடிவு, இலங்கையின் நாட்கள் எவ்வாறு எண்ணப்படப் போகின்றன என்பதைத் தீர்மானிக்கவல்ல முடிவாக இருக்கப் போகின்றது. இதன்போது தமிழர் தரப்பு மேற்கொள்ளவுள்ள தீர்மானம், தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொள்வதாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாது, ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்புவெறுப்புகளிலிருந்து விடயங்கள் நோக்கப்படுமாக இருந்தால், முடிவு தமிழ் மக்களுக்கு பாதகமாகவே அமையும்.

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ பலம் என்பது பேரம் பேசுவதற்கான பலமாகும். பேரம் பேசுவதற்கான பலத்தை எல்லா நேரங்களிலும் பயன்படுத்த முடியாது. தென்னிலங்கையின் அரசியல் பலவீனமாக இருக்கின்றபோதுதான், தமிழர் தரப்புக்கான வாய்ப்புக்கள் கிடைக்கும். அவ்வாறான வாய்ப்புக்கள் கிடைக்கும்போது, அதனை கெட்டியாக பற்றிக்கொள்ள வேண்டும். அதுதான் அரசியல். அரசியலென்பது அடிப்படையில் சூழ்நிலையை கையாளுகின்ற ஒரு கலையாகும். அந்தக் கலையை கச்சிதமாக பயன்படுத்தும் சமூகங்களே அரசியலால் நன்மையடைகின்றன. ஏனையவர்கள் அனைவரும் வெறும் குற்றச் சாட்டுக்களுடன் காலத்தை விரயம் செய்கின்றனர்.

# உலகுக்கு ஒரு பாடம்!

*ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே படுகொலை செய்யப்பட்டிருப்பது உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது. 30 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ்பெற்ற அரசியல் தலைவராகத் திகழ்ந்த ஷின்ஸோ அபேயை யார் கொல்ல நினைத்திருப்பார்? ஜப்பானில் புகழ் பெற்ற யாசுகா என்ற வன்முறைக் கும்பல் உள்ளது. ஆனால், அந்தக் கும்பலால் பொதுமக்களுக்கு எந்த இடையூறும் ஏற்படாது. அடிக்கடி குற்றச்செயலில் ஈடுபடும் யாசுகாவினர்கூட துப்பாக்கியைப் பயன்படுத்த யோசிப்பார்கள். ஏனென்றால், சட்ட விரோதமாக துப்பாக்கி வைத்திருந்தால் அதற்கான அபராதம் கூடுதலாக இருக்கும்.*

*ஜப்பானில் ஒருவர் துப்பாக்கி வைத்திருக்க வேண்டுமென்றால் அவர்மீது குற்ற வழக்கு எதுவும் இருக்கக் கூடாது என்பது உட்பட பல இறுக்கமான கட்டுப்பாடுகள் உள்ளன. ஆகவேதான், அங்கு துப்பாக்கி குற்றங்கள் பெரிய அளவில் நடை பெறுவதில்லை. ஒரு வருடத்துக்கு சராசரியாக பத்துக்கும் குறைவான துப்பாக்கி சூடு மரணங்களே அங்குநடைபெறும். 2017ஆம் ஆண்டில் வெறும் மூன்று மரணங்களே துப் பாக்கி சூட்டால் நடைபெற்றன. தற்போது அபேயை சுட்டதாகக் கைது செய்யப்பட்ட 41 வயது நபர் அந்நாட்டின் முன்னாள் தற்காப்புப் படை வீரர். இப்படை இராணு வத்திற்கு நிகரானது. அவர் கடற்படையில் வெறும் மூன்று ஆண்டுகள் மட்டுமே பணி புரிந்திருக்கிறார். மேலும் அவர் பயன்படுத்திய துப்பாக்கி மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அது வீட்டில் செய்யப்பட்ட துப்பாக்கியைப் போல் இருந்தது. அது இணையதளத்தைப் பார்த்து செய்யப்பட்டதாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இது திட்டமிட்ட அரசியல் தாக்குதலா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.*

*1960ஆம் ஆண்டில் ஜப்பானின் சோஷலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இனேஜிரோ ஆசானுமா, வலதுசாரி நபர் ஒருவரால் சாமுராய் வாளால் வயிற்றில் தாக்கப்பட்டு கொல்லப்பட்டார். ஜப்பானில் தீவிர வலதுசாரி ஆதரவாளர்கள் இன்றும் இருக்கிறார்கள். இருப்பினும் வலதுசாரி தேசியவாதியான அபே தாக்குதல் இலக்காக வைக்கப்பட்டிருந்தமை ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக ஜப்பானில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.*

*ஜப்பான் பாதுகாப்பான நாடாக இருந்தாலும், கட்டுப்பாடு நிறைந்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. தேர்தல் பிரசாரத்தின்போது அரசியல் தலைவர்கள் மக்களிடம் இயல்பாகப் பேசுவார்கள். சாலையில் நின்று உரையாற்றுவார்கள். இத்தகைய சூழ்நிலையை பயன்படுத்தித்தான் அபேவை நெருங்க முடிந்திருக்கிறது கொலையாளியால். ஜப்பானின் அரசியல் வரலாற்றில் மோசமான நிகழ்வாக அபேயின் படுகொலை பார்க்கப்படுகிறது. அவர், தான் ஒரு தேசியவாதியா, யதார்த்தவாதியா என்ற விவாதத்தை தன் எதிர்ப்பாளர்களிடமும், ஆதரவாளர்களிடமும் தொடர்ந்து எழுப்பிக் கொண்டு இருந்தார். விமர்சிப்பவர்களுக்கு அவர் ஜப்பானின் தலைமைவாத சித்தாந்தத்தை ஆதரிப்பவர் சிக்கலான வெளியுறவுக் கொள்கைகளை ஆதரிப்பவர். ஆதரவாளர்களுக்கு தேசியவாத நலன்களை உணர்ந்து உலகளாவிய நிலைக்கு ஜப்பானை உயர்த்தியவர்.*

*இந்த இரண்டுமே உண்மைக்கு அருகிலே இருப்பதாகவே அரசியல் நிபுணர்கள் கருதுகின்றனர். தனது பதவிக் காலத்தில் ஜப்பானின் தேசிய அடையாளத்தையும், மரபுகளையும் உயர்த்துவதற்காக தொடர்ந்து பணியாற்றிய அபே, தொழிலாளர் ஜனநாயக கட்சியின் வெற்றி முகமாகத் திகழ்ந்தவர்.*

*அபேயின் அரசியல் பயணம் நீண்டது. அவரது தாத்தா நுபுசிகே கிஷி ஜப்பானின் பிரதமராகவும், தந்தை ஷிந்தரோ அபே வெளியுறவுத்துறை அமைச்சராகவும் இருந்தவர்கள். 1993ஆம் ஆண்டு அபே முதன் முதலாக ஜப்பான் பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். 2005ஆம் ஆண்டு அமைச்சரானார் 2006ஆம் ஆண்டு ஜப்பான் பிரதமர் ஆனார். குறுகிய காலமே பதவியில் இருந்தார். ஆனால், அவர் மீண்டும் 2012ஆம் ஆண்டு ஜப்பான் பிரதமரானார். தொடர்ந்து எட்டு ஆண்டுகள் பிரதமராக இருந்த அபே 2020ஆம் ஆண்டு பதவியில் இருந்து விலகினார். அபேயின் அரசியல் செல்வாக்கு ஏற்ற இறக்கங்கள் நிறைந்தது. ஆனால், தொழிலா ளர் ஜனநாயக கட்சியைப் பொறுத் தவரை செல்வாக்கு மிக்க தலைவராகவே அவர் திகழ்ந்தார்.*

*ஷின்ஸோ அபே, நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவு கொள்கைகளுக்காக பாராட்டப்பட்டாலும், தொடர்ந்து விமர்சிக்கப்பட்டுக் கொண்டும் இருந்தார். அவரது தேசியவாத கருத்துக்கள், சீனா, தென்கெரியாவுடனான ஜப்பானின் உறவில் பதற்றத்தை எழுப்பின. ஜப்பானின் சர்ச்சைக்குரிய இடமான யசுகுனி நினைவாலயத்திற்கு அவர் அடிக்கடி பயணம் செய்தார். இது ஜப்பான் இடதுசாரிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தியது.*

*ஜப்பான் நாடு, தன்னை காத்துக்கொள்ளவும், தாக்குதலுக்கு உள்ளாகும் நட்பு நாடுகளை காக்கவும் வெளிநாடுகளில் துருப்புக்களை அணி திரட்ட முயன்றார். அயல்நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி அபேயின் திட்டத்திற்கு பாராளுமன்றம் ஒப்புதல் வழங்கியது. ஜப்பான் இராணுவத்தை முறையாக அங்கீகரிப்பதற்காக அரசியலமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என்று அபே விரும்பினார்.*

*இந்தத் திட்டம்தான் தற்போது வரை ஜப்பானின் விவாதத்துக்குரியதாகவே இருக்கிறது. ஜப்பானின் மேல்சபைக்குப் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து, தெற்கு நகரமான நாராவில் அபே பிரசாரம் மேற்கொண்டிருந்தபோதுதான், ஜப்பான் கடற்படையின் தற்காப்புப் பிரிவு முன்னாள் உறுப்பினரால் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தார். கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஜப்பானின் அரசியல் முகமாகவே அபே அறியப்பட்டார். அவரின் கொலை எந்த ஒரு நாட்டிலும் ஜனநாயகத்திற்கு மதிப்பு இருக்க வேண்டும். அரசியல் அதிருப்திகளை வாக்குச்சீட்டின் மூலம்தான் தீர்த்துக் கொள்ள வேண்டும் வன்முறைக்கு இடம் கொடுக்கக் கூடாது. ஜப்பான் மட்டுமின்றி உலகின் எல்லா நாடுகளும் இதனைக் கற்றுக் கொள்ள வேண்டும்.*

**நன்றி - தினமணி**

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜுலை - 19 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - ஆடி 03
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திதித்துவயம்




**மேடம்**
முயற்சி வெற்றியாகும் நாள். வர வேண்டிய பணம் இன்று வந்து சேரும்.பணியிடத்தில் நீங்கள் எதிர்பார்த்த மாற்றம் காண்பீர்கள். எண்ணம் நிறைவேறும் நாள்.பொருளாதார நிலை சீராகும்.

**இடபம்**
உயரதிகாரிகளின் ஆதரவுடன் உங்கள் விருப்பம் நிறைவேறும்.உங்களை விட்டு விலகிச் சென்றவர்கள் மீண்டும் வருவார்கள். கூட்டுத்தொழில் பற்றி சிந்திப்பீர்கள்.

**மிதுனம்**
திட்டமிட்ட செயல்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் செல்வாக்கு உயரும் நாள். பழைய பிரச்னைகளில் ஒன்றை முடிப்பீர்கள். நன்மையான நாள். வியாபாரத்தில் புதிய நட்பு உண்டாகும்.

**கடகம்**
இன்று முடியும் தருவாயில் இருந்த வேலை இழுபறியாகும்.அமைதி தேவை.சந்திராஷ்டமம் என்பதால் புதிய முயற்சி வேண்டாம். பணிபுரியும் இடத்தில் நிதானம் அவசியம்.விழிப்புணர்வு தேவை.

**சிம்மம்**
நண்பர்களின் ஆதரவுடன் உங்கள் செயல் சாதகமாகும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட சங்கடம் விலகும். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**கன்னி**
ஆரோக்கியத்தில் ஏற்பட்ட சங்கடம் நீங்கும். உங்கள் முயற்சி வெற்றியாகும்.உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவுடன் செயல்படுவார்கள். வருமானம் அதிகரிக்கும்.முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**துலாம்**
நேற்றைய முயற்சி ஒன்று நிறைவேறும். குடும்பத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். செலவுகளைக் கட்டுப்படுத்தி சேமிக்கத் தொடங்குவீர்கள். பணியிடத்தில் பொறுப்பு கூடும்.

**விருட்சிகம்**
உழைப்பிற்கேற்ற ஆதாயம் காண்பீர்கள். தொழில் நிலையில் திருப்தி ஏற்படும்.உறவினர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. புதிய வேலை வாய்ப்பு ஏற்படும்.

**தனுசு**
குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். நிதிநிலை சீராகும். வியாபாரத்தில் ஏற்பட்ட தடைகள் நீங்கும் எதிர்பார்த்த பணம் வரும். வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும்.

**மகரம்**
குடும்பத்தில் ஏற்பட்ட நெருக்கடி நீங்கும். தம்பதிகள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வீர்கள்.தடைபட்டிருந்த வருமானம் மீண்டும் வரும். செயல்கள் எளிதாக நிறைவேறும்

**கும்பம்**
முயற்சிக்கேற்ற பலன் இல்லை என்ற எண்ணம் மேலோங்கும்.வியாபாரத்தில் உங்கள் எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். நெருக்கடி அதிகரிக்கும்.விழிப்புடன் செயல்பட்டு வெற்றி அடையும் நாள்.

**மீனம்**
எதிர்பாராத செலவுகளால் சங்கடத்தை சந்திப்பீர்கள். புதிய முயற்சிகள் வேண்டாம்.அரசு வழியில் நெருக்கடி உண்டாகும். யாருடனும் விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.அலைச்சலுடன் செலவும் அதிகரிக்கும். செயல்கள் இழுபறியாகும்.

# இலங்கைக்கு நிபந்தனை இல்லாமல் உதவிகள் எதையும் வழங்கக்கூடாது!

## பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்து

*சென்னை, ஜுலை 19*

"நிபந்தனைகள் இல்லாமல் இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் அங்கு நிலவும் இனப் பாகுபாட்டை அதிகரிக்கவே வகை செய்யும் என்பதால், அதை உணர்ந்து மத்திய அரசு உத்திகளை வகுக்க வேண்டும்" என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுநர் ச. ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"இலங்கை பொருளாதார நெருக்கடி குறித்தும், அந்த நாட்டிற்கு உதவுவது குறித்தும் தீர்மானிப்பதற்காக டில்லியில் நாளை (இன்று) பாராளுமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. இதேநேரத்தில் நிபந்தனைகள் இல்லாமல் செய்யப்படும் உதவிகள் அங்கு நிலவும் இனப்பாகுபாட்டை அதிகரிக்கவே வகை செய்யும் என்பதால், அதை உணர்ந்து மத்திய அரசு உத்திகளை வகுக்க வேண்டும்.

பா. ம. க. ஏற்கெனவே சுட்டிக் காட்டியவாறு இலங்கையில் பொருளாதார நெருக்கடி தானாக ஏற்பட்ட ஒன்றல்ல. ஈழத் தமிழர்களை முற்றிலுமாக அழித்தொழிக்க வேண்டும் என்ற நோக்கில் இராணுவத்துக்கு பெருந்தொகை செலவிடப்பட்டதும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான போருக்கு உதவிய நாடுகளுக்கு இலங்கையின் வளங்களை தாரை வார்த்ததும்தான் இன்றைய நிலைக்கு முக்கிய காரணம்.

இந்தியா தவிர வேறு அண்டை நாடுகள் ஏதுமில்லாத இலங்கை ஒரு மிகப் பெரிய இராணுவத்தை பெரும் பொருட்செலவில் நடத்த வேண்டிய தேவை எதுவும் இல்லை. வடக்கிலும் கிழக்கிலும் ஈழத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அச்சுறுத்தவே இலங்கையின் இராணுவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் போக்கை இலங்கை மாற்றிக் கொள்ளாத வரை இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் அந்த நாட்டு மக்களுக்கு உதவாது. மாறாக இராணுவத்துக்கு தீனி போடுவதற்கே உதவும். ஈழத் தமிழர்களுக்கு எதிரான செயல்களுக்கு இந்தியாவே நிதி உதவி அளிப்பது தீராத பழியாக அமைந்து விடக் கூடும்.

இத்தகைய பழியைத் தடுக்க வேண்டும். இலங்கை அரசுக்கு பல்வேறு நிபந்தனைகளை விதித்து அவற்றுக்கு அந்த நாட்டு அரசு உடன்படும் பட்சத்தில் மட்டுமே உதவிகளை வழங்க வேண்டும். அதிலும் குறிப்பாக இலங்கை மக்களின் அடிப்படைத் தேவைக்கான உணவு, மருந்து பொருட்கள், எரிபொருட்கள் உள்ளிட்ட உதவிகளைத் தான் இலங்கை அரசுக்கு இந்திய அரசு வழங்க வேண்டும். இலங்கை கடுமையான பொருளாதார நெருக்கடிகளை கடந்த காலங்களில் எதிர்கொண்டு வந்த போதும்கூட, தமிழர்களுக்கு எதிரான இனவெறியை கைவிடவில்லை.

இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவெறித் தாக்குதல்கள் தொடர்வதாக ஐ. நா. மனித உரிமைகள் ஆணையம் 2022 பெப்ரவரி மாதம் தனது அறிக்கையில் குற்றஞ்சாட்டியது. இலங்கைப் போரின் போது நிகழ்த்தப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எதற்கும் தீர்வு கிடைக்காத நிலையில், இலங்கையில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து இருப்பதாக அந்த அறிக்கை கூறியது.

இனவெறி கோட்பாட்டை ஒழிக்காதவரை இலங்கைக்கு செய்யப்படும் உதவிகள் விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகும். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக தொடரும் இனவெறி வன்முறைகளுக்கு முடிவுகட்டாமல், பிரச்னைகளுக்கு நிலையான தீர்வு ஏற்படாது. வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவத்தை குறைத்தல், போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை உறுதி செய்தல், தமிழர் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணுதல் உள்ளிட்டவை தொடர்பாக இலங்கையிடம் வாக்குறுதிகளைப் பெற்று அதனடிப்படையில் மட்டும் தான் இலங்கைக்கு மனிதாபிமான உதவிகள் தவிர்த்து மற்ற உதவிகளை இந்தியா செய்ய வேண்டும்.

இதையே இந்தியாவின் கொள்கையாக அறிவிப்பது குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்க வேண்டும். இலங்கையில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்த பிறகு 120இற்கும் மேற்பட்ட ஈழத்தமிழர்கள் வாழ வழியின்றி தமிழகம் வந்துள்ளனர். அவர்களை அகதிகளாக அறிவிக்க முடியாததால் அவர்களுக்கு எந்த உதவியையும் தமிழக அரசால் வழங்க முடியவில்லை. இது குறித்த தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, அகதிகளாக அறிவிப்பதற்கான விதிகளை தளர்த்தி, அவர்களை அகதிகளாக அறிவிப்பது குறித்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மத்திய அரசு சாதகமான முடிவை எடுக்க வேண்டும்.

மற்றொருபுறம், இலங்கையில் ஈழத் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் குறித்து 2021 மார்ச் 23ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் இறுதி அறிக்கை வரும் செப்ரெம்பர் 12ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 51ஆம் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டு விவாதிக்கப்படவுள்ளது. மேலும், இலங்கை மீதான புதிய தீர்மானம் வரும் ஒக்ரோபர் 6ஆம் திகதி நிறைவேற்றப்படும் வாய்ப்பு உள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் போது, தமிழர்களுக்கு நீதி வழங்கும் நோக்கிலும், இலங்கையில் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலும் புதிய தீர்மானத்தை இந்திய அரசே கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். இது குறித்தும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

# கள்ளக்குறிச்சி கலவரம் 329 பேர் வரை கைதாகினர்!

*கள்ளக்குறிச்சி, ஜுலை 19*

கள்ளக்குறிச்சி - சின்னசேலம் வன்முறை தொடர்பாக நேற்றுவரை 329 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சின்னசேலம் தனியார் மேல்நிலை பாடசாலை ஒன்றில் மாணவி ஒருவர் மர்மமாக மரணமானார். 3ஆவது மாடியிலிருந்து தவறி வீழ்ந்ததால் மாணவி உயிரிழந்தார் என்று பாடசாலை நிர்வாகம் பெற்றோருக்கு தெரிவித்தது.

ஆனால், மாணவியின் உடலில் சந்தேகப்படும் விதத்தில் காயங்கள் இருக்கின்றன என்றும் தங்கள் மகளை கொலை செய்துள்ளதாகவும் கூறி பெற்றோரும் உறவினர்களும் பாடசாலையை முற்றுகையிட்டனர். மாணவி மரணத்துக்கு நீதி கேட்டு புாராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து போராட்டம்



கலவரமாக மாறியது. இதன்போது, பாடசாலைக்குள் புகுந்த கும்பல் அங்கிருந்த பொருட்களை சூறையாடியதுடன், வாகனங்களுக்கும் தீ வைத்தது.

இந்த வன்முறையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 329 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே, பாடசாலையின் நிர்வாகியும் அதிபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காலி முகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகள் சஜித்துடன் சந்திப்பு

## புதிதாக தெரிவாகும் அரசாங்கம் குறித்து

**கொழும்பு, ஜூலை 19**

**காலி முகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகளுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் நேற்று கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.**

சந்திப்பின் பின் செய்தியாளர்களிடம் பேசிய காலி முகத்திடல் போராட்டத்தின் பிரதிநிதிகள்,

காலிமுகத்திடல் போராட்டப் பிரசாரத்தின் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட செயற்திட்டத்தை தெரிவாகும் எந்தவொரு அரசாங்கமும் கடைப்பிடிக்கவேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது-என்றனர்.

கலந்துரையாடலின் பின் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், காலிமுகத்திடல் போராட்டப் பிரதிநிதிகள் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியதாக தெரிவித்தார். (அ)



# மன்னார் வளைகுடா கடற்கரையில் தொடங்கியது கணவாய்கள் சீசன்!

மன்னார், ஜூலை 19

அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ரியூப் கணவாய் மீன்களின் சீசன் தொடங்கியதால் மன்னார் வளைகுடா கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் சென்ற பாம்பன் விசைப்படகு மீனவர்களுக்கு அதிக அளவில் கிடைப்பதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பாம்பன் தெற்கு மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து 90க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்க மன்னார் வளைகுடா பகுதிக்குச் சென்ற நிலையில் ஆழ்கடல் பகுதியில் அதிக அளவில் ரியூப் கணவாய் மீன்கள் சிக்கின.

சைக்கிள் ரியூப் போன்று இருப்பதால் இதை டியூப் கணவாய் என்று மீனவர்கள் அழைக்கின்றனர்.

இது கணவாய் வகையில் ஒரு வகைப்படும். ஒரு அடி நீளம் வரையில் இருக்கும். இதற்கு ஊசி கணவாய் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இந்த கணவாய் மீன்கள்



மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் நீந்திச் செல்லும். தற்போது ஒரு கிலோ ரூ.200 முதல் ரூபாய் 250 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

பாம்பன் மீன்பிடித் துறைமுகத்தில் வியாபாரிகள் மூலம் கொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டு அங்கிருந்து அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த வகை கணவாய் மீன்கள் பெரிய வகை மீன்களிடம் இருந்து தப்பிக்க கறுப்பு நிறத்தில் திரவம் போன்று வெளியிட்டு எதிரிகளிடம் இருந்து தப்பித்து செல்லும் தன்மையுடையது. உணவுக்காக மட்டும் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. (அ)

# வவுனியா புளியங்குளத்தில் கரடி தாக்கி ஒருவர் படுகாயம்!

வவுனியா, ஜூலை 19

வவுனியா புளியங்குளம், காட்டுப்பகுதியில் கரடியின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் இளைஞர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் தேன் எடுப்பதற்காக எட்டு பேர் கொண்ட குழு புளியங்குளம் கச்சக்கொடி பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்ற வேளையிலேயே கரடியின் தாக்குதலுக்கு இலக்காகிய குறித்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார். இதனையடுத்து ஏனையவர்கள் குறித்த இளைஞரை அப்பகுதியில் இருந்து மீட்டு புளியங் குளம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இதனையடுத்து அந்த இளைஞர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த நடராசா தர்மராசா (வயது 33) என்ற இளைஞரே கரடியின் தாக்குதலுக்கு இலக்கி படுகாயமடைந்தார். (அ)

# சீனாவை விட இந்தியா கூடுதலான நிதி உதவி!

கொழும்பு, ஜூலை 19

2022 ஜனவரி-ஏப்ரல் காலத்தில் இந்தியா 376.9 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் சீனா 67.9 மில்லியன் டொலர்களையும் இலங்கைக்கு கடனாக வழங்கியுள்ளன.

முதல் நான்கு மாதங்களில் 359.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கியதன் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி, இலங்கைக்குக் கடன் வழங்குநர் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் வரையிலான இந்தியக் கடன்களின் முழு தொகுப்பு 3.5 பில்லியன் டொலர்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு மத்தியில் சீனாவிடமிருந்து 4 பில்லியன் டொலர்கள் கடன் தொடர்பில் இலங்கை நம்பிக்கையுடன் இருக்கிறது. இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இலங்கையில் கடுமையான வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாடு ஏற்பட்டபோதும், மார்ச் மாதத்தில் முற்றிலுமாக சரிவை எட்டியபோதும், சீனாவை முந்திக் கொண்டு இந்தியா இலங்கைக்கு கடனை வழங்கியது.

ஏப்ரல் 30 வரையிலான நான்கு மாதங்களில் நிதி வழங்கல் குறித்த தரவுகளின் அடிப்படையில் சீனாவால் நீடிக்கப்பட்ட 67.9 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடும்போது 376.9 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன்களை நீடித்து இந்தியா முதலிடம் பிடித்தது. (அ)

# வவுனியாவில் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல்!

## நகரசபை உறுப்பினர் கைது

வவுனியா, ஜூலை 19

வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாக நகரசபை உறுப்பினர் உட்பட மேலும் ஒருவரைப் பொலிஸாரால் கைது செய்துள்ளனர்.

வவுனியா மன்னார் வீதி நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக கடந்த நான்கு நாட்களுக்கும் மேலாக இரவு பகல் பாராது அரச உத்தியோகத்தர்கள் ஒரு வரிசையிலும், பொதுமக்கள் ஒரு வரிசையிலும் காத்திருந்தனர். இந் நிலையில் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொலிஸார் தமக்கான புதிய வரிசையை உருவாக்கி எரிபொருளை பெறும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். மேலும் பொலிஸார் தங்களுக்கான எரிபொருளை பெற்ற பின்னரே அரச ஊழியர்கள் பெற முடியும் என தெரிவித்தமையால் அரச ஊழியர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் கேட்ட நகரசபை உறுப் பினர் பாரி மற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இதனால் அப்பகுதியில் பெரும் குழப்ப நிலை ஏற்பட்டதுடன் இரு பொலிஸாருக்கு இரு அரச ஊழியர்கள் என்ற ரீதியில் எரிபொருளை வழங்க பொலிஸார் உடன்பட்டதன் பின்னரே குறித்த குழப்ப நிலை முடிவுக்கு வந்திருந்தது.

இதேவேளை, எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கும்போது பொலிஸார் அதிகளவில் விசேட முன்னுரிமை அடிப்படையில் எரிபொருளை பெற்றுச்செல்வதனால் தங்களுக்கான எரிபொருளை பெறுவதற்கு பல நாட்களுக்கு மேலாக காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# கிளிநொச்சியில் மழை!

கிளிநொச்சி, ஜூலை 19

நீண்ட வெப்பத்துடனான காலநிலையின் பின்னர் மாவட்டத்தில் மழை பெய்து வருகின்றது.

கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்று பகல் மழை பெய்தது.

அண்மைக் காலமாக கடும் வெப்பம் மற்றும் பலத்த காற்றுடனான காலநிலை காணப்பட்டது.

இந்த நிலையில், நேற்று மழையுடனான காலநிலை மாவட்டத்தில் காணப்படுகின்றது.

பலத்த மழை பெய்யா விடினும், ஓரளவு வெப்பத்தைத் தணிக்கும் வகையிலும், சிறு தோட்டப் பயிர்களுக்கு ஏற்புடையதாகவும் உள்ளது. (அ)

# நிட்டம்புவ எரிபொருள் நிலையத்தில் குழப்பம்

## 5 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 19

நிட்டம்புவ - கலகெடிஹேன எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுக் காலை வரிசையில் நின்றவர்களிடையே ஏற்பட்ட அமைதியின்மையின் போது, கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டதில், 5 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களுக்கு இடையில் இந்த மோதல் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 3 பேர் வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையிலும் மேலும் இருவர் கம்பஹா வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சர்வகட்சி அரசில் பொறுப்புக்களை ஏற்கவும் தேசிய மக்கள் சக்தி தயார்!

## அனுரகுமார திஸநாயக்க அறிவிப்பு

கொழும்பு, ஜூலை. 19

**சர்வகட்சி அரசாங்கத்தில் பொறுப்புக்களை ஏற்கவும் தேசிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாக அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

காலி முகத்திடல் செயற்பாட்டாளர்களுக்கும் மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் இடையில் நேற்று முன்தினம் பத்தரமுல்லையில் உள்ள கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறுதி நேரத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுவை மீளப்பெறுவது தொடர்பில் அவர் கருத்து தெரிவித்தார்.

"வேட்புமனுவை மீளப்பெற நாங்கள் தயாராக இருக்கிறோம். அது புதன்கிழமை வரை செல்லுபடியாகும். ஆனால் எங்கள் முன்மொழிவுகள் செயல்படுத்தப்படாவிட்டால், நான் போட்டியிடுவேன். அது திரும்பப் பெறப்படாது" என அவர் கூறினார். (அ)



# கடும் காற்றினால் வாழைகள் அழிவு!



முல்லைத்தீவு, ஜூலை. 19

கடும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்துக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் உள்ள பெரும்பாலான விவசாயிகளின் வாழை பயிர்ச்செய்கையை அழிவடைந்துள்ளது.

வருடம் தோறும் இவ்வாறு ஏற்படும் அழிவுகளுக்கான மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் மேற்கொள்ளப்படுகின்றபோதிலும் அதற்கான நட்ட ஈடுகள் வழங்கப்படுவதில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்த நிலையில் தற்போது வீசி வரும் பலத்த காற்றினால் தாம் மேற்கோண்ட வாழைகள் அழிவடைந்துள்ளதாகவும், தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எரிபொருளை அதிக விலைக்கு (1200 ரூபாய்க்கு) கொள்வனவு செய்து நீர்பாய்ச்சி மேற்கொண்ட தமக்கு பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்தி விவசாயிகளுக்கு உரிய நட்டஈட்டை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர். (அ)

# 21ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக எரிபொருள்கள் விநியோகிப்படும்!

## இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, ஜூலை. 19

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 92 ரக பெற்றோல் மற்றும் ஓட்டோ டீசலை மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

எனவே, அதுவரை வாகனங்களுடன் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக வரிசையில் காத்திருக்கவேண்டாம் என மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறைமைக்கு அமைய, வாகனங்களை வைத்திருப்போர், fuelpass.gov.lk என்ற இணைத்தளத் துக்கு பிரவேசித்து தேசிய எரி பொருள் அட்டைக்காக தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர். (அ)

# மஹகமவில் வாள்வெட்டு; ஓட்டோச் சாரதி கொலை!

கொழும்பு, ஜூலை. 19

கட்டுநாயக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மஹகம, ஹீனடியான பகுதியில் வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் மஹகம, ஹீனடியான பிரதேசத்தில் வசிக்கும் 38 வயதான ஓட்டோச் சாரதி ஆவார். நேற்று முன்தினம் இரவு ஓட்டோவுக்கு எரிபொருளைப் பெற்றுக் கொள்வதாக வீட்டாருக்கு அறிவித்துவிட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு சென்றுள்ளார்.

வழியில் மற்றுமொரு ஓட்டோவில் வந்த சிலர் குறித்த நபரை வாள்களால் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

வாள்வெட்டு தாக்குதலுக்கு இலக்கான நபர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# பஸ் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை. 19

எரிபொருள் விலை திருத்தத்தின் மூலம் அந்த நன்மையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு பஸ் கட்டணங்கள் குறைக்கப்படுமா என்பது குறித்து வினவியமைக்கு,

எரிபொருள் விலையை குறைப்பது மிகவும் நல்ல விடயம். உண்மையில் இந்த நேரத்தில் டீசல் போதியளவில் இருந்திருந்தால் அந்த பலனை மக்களுக்கு வழங்க முடிந்திருக்கும். அரசு விலையை குறைத்து எரிபொருள் விநியோகத்தை துரிதப்படுத்தினால் நாம் அந்த பலனை மக்களுக்கு வழங்க முடியும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன பதிலளித்தார். (அ)

# ரயில் மீது மோதுண்டது கார்! கர்ப்பிணியும், மகளும் பலி!!

கொழும்பு, ஜூலை. 19

காலி, மக்குலுவல பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் கர்ப்பிணித் தாயொருவரும், அவரின் 7 வயது மகளும் பலியாகியுள்ளனர். மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

காலி- மக்குலுவ பகுதியிலுள்ள ரயில் குறுக்கு வீதியில் பயணித்த கார் மீது ரயில் மோதுண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த காரில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அறுவர் பயணித்துள்ளனர். (அ)



# புதிய ஜனாதிபதி தெரிவில் முஸ்லிம்களின் உரிமைகளை பெற முயற்சிக்கவேண்டும்

## ஐக்கிய காங்கிரஸ் கட்சி கோரிக்கை

அம்பாறை, ஜூலை. 19

முஸ்லிம் மக்கள் வாக்குகளை பெற்று பாராளுமன்ற சுகபோகம் அனுபவிக்கும் முஸ்லிம் கட்சிகள் ஒற்றுமைப்பட்டு புதிய ஜனாதிபதி தெரிவில் முஸ்லிம் சமூகத்தின் சில உரிமைக ளையாவது பெற முயற்சிக்க வேண்டுமே தவிர பணம், பதவி களுக்காக வாக்களிக்கக்கூடாது என ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) கோரிக்கை விடுத்துள்ளது.

கல்முனை காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் கலாபூசணம் முபாறக் அப்துல் மஜீத் மௌலவி இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் ஆணையை பெற்றது முதல் இன்று வரை அக்கட்சி அரசுக்கும், ஜனாதிபதிகளுக்கும் ஆதரவளிக்கும் போது முஸ்லிம் சமூகத்தின் எந்தவொரு உரிமையையும் முன்வைத்து ஆதரவளித்ததில்லை. அதே போல் ஏனைய மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் என்பவை கூட முஸ்லிம்களின் உரிமைகளை முன் வைக்காமல் தமக்குரிய பதவிகளை மட்டுமே முன் வைத்து ஆதரவளித்து வந்துள்ளனர். எமது உலமா கட்சி மட்டுமே 2005 ஜனாதிபதித் தேர்தலின் போது மௌலவி ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை எழுத்து மூலம் முன் வைத்து அன்றைய ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து அதனை வென்றும் காட்டியது.

அதே போல் 2019 தேர்தலிலும் 16 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்தோம். ஆனாலும் முஸ்லிம் சமூகம் எமது கட்சிக்கு ஆணை தராததால் எமது கோரிக்கைகள் எதையும் கோட்டாவோ பொதுஜன பெரமுனவோ நிறைவேற்றவில்லை. அவர்களின் இத்தகைய மனோநிலை காரணமாக இன்று கேவலமான நிலைக்கு வந்துள்ளனர். ஆகவே முஸ்லிம்களின் ஓட்டுக்களை பெற்று பாராளுமன்றத்தில் இருக்கும் கட்சிகள் முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கும் சில உரிமைகளையாவது பெற்றுத்தரும் வகையில் பேச்சுவார்த்தை செய்து ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முன் வரவேண்டும்-என்றார். (அ)

# ஓட்டோ கட்டணம் குறைப்பு!

கொழும்பு, ஜூலை. 19

எரிபொருள் விலை குறைப்புடன் ஓட்டோ உரிமையாளர்கள் சங்கம், பயணக் கட்டணம் தொடர்பான அறி விப்பொன்றை வெளியிட்டுள் ளது.



அதற்கமைய, இரண்டாவது கிலோ மீற்றருக்கு அறவிடப்படும் கட்டணம், 100 ரூபா விலிருந்து 90 ரூபாவாக குறைக்க தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை ஓட்டோ உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

மேலும், முதலாவது கிலோ மீற்றருக்காக தற்போது அறவிடப்படும், 100 ரூபா கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லையென அவர் மேலும் கூறினார். (அ)

## மாத இறுதியில் எரிவாயு விநியோகத்தில் 50 வீதத்தை நிறைவு செய்யவுள்ள லிட்ரோ

கொழும்பு, ஜூலை 19

லிட்ரோ எரிவாயு விநியோகம் தற்போது நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் இடம்பெறுகின்ற நிலையில். இந்த மாத இறுதியளவில் நாட்டில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் லிட்ரோ எரிவாயு விநியோகத்தில் 50 வீதத்தை நிறைவு செய்ய முடியும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் எரிவாயுவின் தேவை குறிப்பிடத்தக்க வகையில் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும் ஏனைய பிரதேசங்களுக்கு லிற்றோ எரிவாயுவை விநியோகிக்கும் நடவடிக்கை 3 நாட்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## எரிபொருள் இன்மை காரணமாக குடிதண்ணீர் வழங்கலில் நெருக்கடி

கிளிநொச்சி, ஜூலை 19

தற்போது ஏற்பட்டுள்ள மின்வெட்டு மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 24 மணி நேரமும் சீரான குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

நாளாந்தம் ஏற்படுகின்ற மின்சார துண்டிப்பு மற்றும் மாற்று ஏற்பாட்டை மேற்கொள்வதற்கான எரிபொருள் இன்மை போன்ற காரணங்களால் கடந்த காலங்கள் போன்று 24 மணி நேரமும் நீர் விநியோகத்தை மேற்கொள்ள இயலாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் முன் அறிவித்தல் இன்றி நீர் விநியோக துண்டிப்பு ஏற்படும்.

இதேவேளை, மேற்படி நெருக்கடி நிலைமைகளால் பூநகரி நீர் வழங்கல் திட்டமானது கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து அதிக தொலைவில் இருப்பதன் காரணமாக அங்கு தேவையான நீரை விநியோகிப்பதில் ஏற்படுகின்ற சிரமங்கள் காரணமாக தினமும் காலை 5 மணி முதல் காலை 8 மணி வரையும் நீர் விநியோகம் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர் விநியோகிப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பொது மக்கள் நீரை சிக்கனமாகவும் அத்தியாவசிய தேவைகளுக்கும் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

# புதிய ஜனாதிபதி தேர்வு; சு.கவுக்குள் மேலும் பிளவு

### கட்சி தீர்மானத்தை மீறி வாக்களிக்க முடிவு

**கொழும்பு, ஜூலை 19**

**ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில், எந்தவொரு உறுப்பினருக்கும் வாக்களிப்பதில்லை என்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானத்தை மீறி வாக்களிப்பில் பங்கேற்கவுள்ளதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

மக்கள் வாக்கினால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தாம் இந்த தெரிவின்போது வாக்களிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தெரிவுக்கான தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் எவரும் உரிய திட்டங்களை முன்வைக்காமை காரணமாக, ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் தமது கட்சி வாக்களிக்காது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, 14 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அதிருப்தி அணியாக சுதந்திர கட்சி செயற்பட்டு வந்திருந்த நிலையில் நால்வர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவையில் பொறுப்புகளை ஏற்றதன் மூலம் சு.க. தரப்பில் பிளவு ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில், தற்போது புதிய ஜனாதிபதி தேர்வில் கட்சி தீர்மானத்தை மீறி வக்களிக்கப்போவதாக பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்துள்ளதன் மூலம் அக்கட்சிக்குள் மேலும் பிளவு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 50 கண்ணீர்ப் புகை தோட்டாக்களை கொள்ளையிட்டாரென ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 19

பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்கும் பொல்துவ சந்தியில் கடந்த 13ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படவிருந்த கண்ணீர்ப்புகை தோட்டாக்களை கொள்ளையிட்டமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆர்ப்பாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக 50 கண்ணீர்ப் புகை தோட்டாக்கள் எடுத்து செல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் குறித்த நபர் அதனை கொள்ளையிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெலிக்கடை பொலிஸ் அதிகாரிகள் ஊடாக ஒபேயசேகர புர - நாணயக்கார மாவத்தை பகுதியில் வைத்து 31 வயதுடைய குறித்த நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். இதன்போது சந்தேகநபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் பொரளையில் கோதமி வீதியில் அவர் தற்கா லிகமாக தங்கியிருந்த வீட்டில் இருந்து 50 கண்ணீர்ப் புகை தோட்டாக்கள் மீட்கப்பட்டுள்ளன. (அ)

## உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு ஜி-7 கூட்டணி இலங்கைக்கு உதவி!

கொழும்பு, ஜூலை 19

உலக உணவு நெருக்கடி தொடர்பில் ஜி-7 கூட்டமைப்பு இலங்கைக்கு 14 மில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுக்காக செலவிட முன்வந்துள்ளதாக தெரிவித்த பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகள் உணவு நெருக்கடியை தவிர்ப்பதற்கு இன்னும் அதிகமாக செயற்படவேண்டியுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டின்போது உரையாற்றிய பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சுமார் 6 மில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் அவதிப்படுவதாக கூறப்படுகிறது. சில அறிக்கைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்கள் 7.5 மில்லியன் பேர் வரை இருக்கலாம் என்று கூறுகின்றன. இலங்கையின் சராசரி நெல் உற்பத்தி பொதுவாக 24 மில்லியன் மெற்றிக் தொன் ஆகும். இருப்பினும், 2021 இல் 16 மில்லியன் மெற்றிக் தொன்களே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே இலங்கை தனது அரிசி தேவையில் மூன்றில் ஒரு பகுதியை இறக்குமதி செய்ய வேண்டும். உணவு பாதுகாப்பு தொடர்பான ஜி-7 உலகளாவிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் உலக வங்கியும் 14 பில்லியன் அமெரிக்க டொலர்களை உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு எமக்கு வழங்க முன்வந்துள்ளது. அவர்களுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அரசாங்கம் நல்லதொரு பாதுகாப்புத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது” என்றும் அவர் மேலும் கூறினார்.

“இலங்கையின் பொருளாதார நெருக்கடி தவறான பொருளாதார கொள்கைகள் என்றாலும் உலகளாவிய நெருக்கடி மற்றொரு முக்கிய காரணமாகும் . உக்ரைன் யுத்தம் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்கின்றன. பொருளாதாரத் தடைகள் எங்களைப் பாதிக்காது என்று ஐரோப்பிய ஒன்றியம் கூறுகிறது.

இருப்பினும், அது மூன்றாம் உலகத்தை பாதிக்கும். ரஷ்யாவும் உக்ரேனும் போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்க வேண்டும் மற்றும் பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்க்கப்பட வேண்டும், “என்று பதில் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

## கோட்டாபயவுக்கு எந்த நாடும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது

### அம்பாறை காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 19

போர்க்குற்றவாளியான முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எந்த நாடும் அகதி அடைக்கலம் கொடுக்கக்கூடாது என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவிக்கையில்-

இலங்கையில் இருந்து தப்பி ஓடிய ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எந்த நாடும் அகதி அந்தஸ்து கொடுத்து எந்த நாடும் வாழ்வதற்கு இடம்கொடுக்க வேண்டாம். மக்கள் போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதி வெளியேற்றப்பட்டதை நாம் வரவேற்கின்றோம். எமது உறவுகளை இந்த ஜனாதிபதி பிரதமரிடம் தான் கொடுத்துவிட்டு தொலைத்து விட்டுள்ளோம். இறுதி யுத்தத்தின்போது எமது உறவுகளை இவர்களிடம் தான் ஒப்படைத்திருந்தோம். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதை தான் அன்றிலிருந்து இன்று வரை கேட்டு இருக்கின்றோம். எமது உறவுகளை காணாமல் ஆக்கிய ராஜபக்ஷ குடும்பத்திற்கு எவரும் ஆதரவு அழிக்க வேண்டாம். இன்று எமது உறவுகளை காணாமல் ஆக்கிவிட்டு தற்போது அவர்களும் காணாமல் ஆக்கப்படும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு பதில் கிடைக்காமல் நாம் இருக்கின்றோம்-என்றார்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர் அழகேஸ்வரி தெரிவிக்கையில்-

நாங்கள் தற்போது 50 வீதம் ஆனந்தமாகவும் 50 வீதம் கவலையாகவும் தான் இருக்கின்றோம். ஏனெனில் 12 வருடங்கள் நாங்கள் போராடியமைக்கு எவ்வித பலனும் கிடைக்கவில்லை. ஆனாலும் கோட்டபாய துரத்தப்பட்டுள்ளதால் எமக்கு ஒரு சந்தோசம் உள்ளது. ஆனால் இனியும் அவர்கள் தான் வருவார்கள் என்ற சந்தேகமும் எமக்குள்ளது. இந்நிலையில் இனியும் எம்மால் போராட முடியாது. வயது சென்று கொண்டு இருக்கின்றது. எதிர்கால ஜனாதிபதி பிரதமர் ஆகியோர் எமது விடயத்தில் தலையிட்டு தீர்வினை பெற்று தர வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்-என்றார்.

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க ஆலோசகர் தாமோதரம் பிரதீபன் தெரிவிக்கையில்-

இந்த நாட்டின் ஜனாதிபதி பிரதமரின் சர்வதிகாரப் போக்குடன் தமிழர்களின் பூர்விக இடங்களை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தார்கள். இதற்காக செயலணி ஒன்றினை உருவாக்கி பல மோசடிகளை மேற்கொண்டிருந் தார்கள். இதன் விளைவாக அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரையிலான தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டிருந்தன. வடக்கு-கிழக்கிலும் இவ்வாறான நிலைமை தொடர்கின்றது. எனவே இந்த செயற்பாட்டிற்கு மூல காரணமான ஜனாதிபதி கோட்டபாய மக்களின் போராட்டத்தினால் நாட்டை விட்டு விரட்டப்பட்டுள்ளார். இறுதி யுத்த மனித உரிமை மீறல் செயற்பாட்டில் குற்றஞ்சாட்டப்பட்ட இவருக்கு எந்த நாடுகளும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது-என்றார். (அ)

# மக்கள் கிளர்ச்சி போராட்டக்காரர்களுடன் அரசியல் தொடர்பாடல் அவசியம்



கலாநிதி ஜெகான் பெரேரா

நாளையதினம் (ஜூலை 20) பாராளுமன்றத்தில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சியின் வேட்பாளராக பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளரினால் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இந்த நியமனம் தொடர்பில் சர்ச்சையொன்று நிவுகிறது. பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் வேறு சில உறுப்பினர்களும் விக்கிரமசிங்கவின் நியமனத்தை மறுத்திருக்கிறார்கள். இந்த சர்ச்சை பரந்தளவில் சமூகத்திலும் வியாபித்திருக்கிறது. பதில் ஜனாதிபதி குறித்து சமூகத்தில் கடுமையான எதிரெதிர் கருத்துகள் இருக்கின்றன.

விக்கிரமசிங்கவின் ஆதரவாளர்களைப் பொறுத்தவரை, பொருளாதார வீழ்ச்சிக்கு முன்னர் நாட்டில் நிலவிய சூழ்நிலையை மீளக்கொண்டுவருவதற்கு அவரே சிறந்த தெரிவு என்று நம்புகிறார்கள். அவரது அரசியல் அனுபவம் மற்றும் சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதில் அவருக்கு இருக்கும் ஆற்றல் குறித்து நம்பிக்கை இருக்கிறது. அவரை எதிர்ப்பவர்கள் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்த பழைய ஒழுங்கையும் அதன் ஊழலையும் பாதுகாக்கக் கூடிய ஒருவராக அவரை நோக்குகிற்ர்கள். பழைய ஆட்சியாளர்கள் மீண்டும் எதிர்காலத்தில் பதவிக்கு வந்துவிடக்கூடும் என்று அவர்கள் சந்தேகிக்கிறார்கள்.

மக்கள் கிளர்ச்சி “அறகலய“ போராட்டம் மே 9 ஒரு வன்முறைத் திருப்பத்தை எடுத்த பிறகு எதிரணி வரிசையில் இருந்து விக்கிரமசிங்கவை முன்னாள் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ச பிரதமராக நியமித்தார். மே 9 அரசாங்கத்தினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட குண்டர்கள் கொழும்பு காலிமுகத்திடல் கோட்டா கோ கம போராட்டக்காரர்கள் மீது மேற்கொண்ட தாக்குதலை அடுத்து சுமார் 70 அரசாங்க உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. அன்றைய தினமே மகிந்த ராஜபக்சவும் பிரதமர் பதவியில் இருந்து விலகினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் விக்கிரமசிங்கவின் வருகை ஒரு பிரதமரும் அமைச்சரவையும் இல்லாமல் தடுமாறிக்கொண்டிருந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு உடனடியாக ஒருவித உறுதிப்பாட்டைக் கொடுத்தது. அரசாங்கம் உடனடியாக பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்திக்கொண்டிருந்தவர்கள் விக்கிரமசிங்க பிரதமராக பதவியேற்றது குறித்து ஆவேசமடைந்த அதேவேளை வேறு தரப்பினர் குழப்பநிலைக்கு பதிலாக உறுதிப்பாடும் நடைமுறைச் சாத்தியமான ஆட்சிமுறையும் வரும் என்று நம்பினார்கள்.

பதில் ஜனாதிபதி பொருளாதார உதவி தொடர்பிலான தனது முதலாவது நடவடிக்கையாக, வன்முறையில் வீடுகளை இழந்த சகல அரசாங்க உறுப்பினர்களுக்கும் வீடுகள் மீளக்கட்டித்தரப்படும் என்று அறிவித்திருக்கிறார். அந்த உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்கு பிறகு தனது வீடும் எரிக்கப்பட்டதால் அவர்கள் மீது பதில் ஜனாதிபதி அனுதாபப்படுவதற்கு காரணம் இருக்கிறது. ஆனால், பல வருடங்களாக நீடித்த போர் மற்றும் வன்முறைகளினால் வீடுகளை இழந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீதும் அண்மைக் காலத்தில் எரிபொருட்களைப் பெறுவதற்காக வரிசைகளில் காத்திருந்து மரணமடைந்தவர்களின் குடும்பங்கள் மீதும் அதேயளவுக்கு அனுதாபப்படவேண்டியதும் அவசியமாகும்.

அரசாங்க உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவங்கள் மக்கள் கிளர்ச்சி போராட்டத்தை மாசு படுத்திய முக்கிய வன்முறை செயல்களாக அமைந்தன. நான்கு மாத மக்கள் கிளர்ச்சியின்போது மரணமடைந்தோரின் எண்ணிக்கை மிகமிக குறைவு. கிளர்ச்சியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர். ஆனால் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்தை தாண்டவில்லை. ஒப்பீட்டு அடிப்படையிலும் சர்வதேச நிலைவரங்களின் அடிப்படையிலும் நோக்கும்போது இலங்கையில் கிளர்ச்சி அமைதியானதாகவே இருந்து வந்திருக்கிறது. இலங்கை மீது கடுமையான சர்வதேச அக்கறை காட்டப்பட்டதற்கு அது காரணமாகவும் அமைந்தது எனலாம்.

## அறகலய நிபந்தனைகள்

அரசியல் விஞ்ஞானத்தில் ஒரு புரட்சி என்பது அரசியல், பொருளாதார மற்றும் சமூக அடக்குமுறை மற்றும் அரசியல் தகுதியீனம் ஆகியவற்றை எதிர்த்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்வயும் போது அரசியல் அதிகாரத்திலும் அரசியல் ஒழுங்கிலும் ஒப்பீட்டளவில் ஏற்படுகின்ற ஒரு அடிப்படை மாற்றமேயாகும்.போர்வெற்றி நாயகர்களாக பெரும்பான்மையான மக்களினால் கருதப்பட்ட மிகவும் பலம் பொருந்தியவர்களான ஜனாதிபதியையும் பிரதமரையும் முழு அமைச்சர்களையும் விரட்டிய ஒரு புரட்சி என்ற வகையில் அறகலய குறிப்பிடத்தக்களவுக்கு அமைதியானதாகவும் கொலைகள் இல்லாததாகவும் அமைந்தது.

போராட்டக்காரர்களும் பாதுகாப்பு படைகளும் தங்களது நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டைப் பேணி நிதானமாக நடந்துகொண்டார்கள். ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு படையினரில் சிலர் போராட்டக்காரர்களுக்கு தங்கள் அனுதாபத்தை வெளிப்படையாகவே காட்டவும் செய்தார்கள். பாதுகாப்பு படையினர் மக்களுடன் கொடூரமாக நடந்த பல சம்பவங்கள் இடம்பெற்ற போதிலும் இந்த அனுதாப வெளிப்பாட்டையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அறகலய போராட்டத்தில் பொதுமக்கள் பெருமளவில் கலந்துகொண்டமையே போராட்டக்காரர்களும் பாதுகாப்பு படையினரும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டமைக்கான பிரதான காரணமாகும். இதுவரையில் அறகலய பல தலைமுறைகளினதும் பல இனத்தவர்களினதும் பங்கேற்புடனானதாக இருந்து வந்திருக்கிறது. குழந்தைகளின் பங்கேற்பையும் கூட காணக்கூடியதாக இருந்தது. முழுக்குடும்பமும் போராட்டத்தில் பங்கேற்கும்போது குழந்தைகளையும் அவர்கள் தூக்கிக்கொண்டுவந்தார்கள். தங்களது சொத்துக்களை சூறையாடி ஒரு மூன்று மாத காலத்திற்குள் தங்களது வருமானத்தை அரைவாசியாக்கிவிட்ட அரசாங்கத்தை விரட்டுவதென்ற ஒரு இலக்கில் நாட்டு மக்கள் இந்த போராட்டத்தில் ஐக்கியப்பட்டு நின்றார்கள்.

அறகலயவின் வெற்றி சாதாரண சூழ்நிலைகளில் சாத்தியப்பட்டிருக்காத அரசியல் மாற்றத்தை வலிந்து கொண்டுவருகிறது என்பதே இப்போது உள்ள பிரச்சினை. மூன்று வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் தேர்தலில் பெறப்பட்ட ஆணை மக்கள் கிளர்ச்சியினால் வலுவிழக்கச்செய்யப்பட்டிருக்கிறது என்பதே இதற்கு காரணமாகும். வலுவிழக்கச்செய்யப்பட்ட ஆணையொன்றைக் கொண்டிருக்கும் ஆளும் கட்சியினதும் முன்னாள் அரசாங்கத்தினதும் உறுப்பினர்களுக்கு இது குறிப்பாக பொருந்துவதாகும்.

இதன் காரணத்தினால்தான் மக்கள் கிளர்ச்சி



இயக்கத்தின் தலைவர்கள் அரசாங்கத்துக்கு நிபந்தனைகளை விதிக்கிறார்கள். இடைக்கால சர்வகட்சி அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும். புதிய வரி அறவீட்டு முறை அறிமுகப்படுத்தப்படவேண்டும். அரசியலமைப்பு மாற்றம் வேண்டும். ஒரு வருடத்திற்குள் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பன நிபந்தனைகளில் முக்கியமானவை. தாங்கள் நிராகரிக்கும் பதில் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பது போன்ற வேறு நிபந்தனைகளும் முன்வைக்கப்படுகின்றன.

அமைதிவழிப் புரட்சியின் மூலமாக அரசாங்கத்தின் ஆணை தார்மீக ரீதியிலும் நடைமுறை ரீதியாகவும் வலுவிழக்கச்செய்யப்பட்ட பின்புலத்தில், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) வின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க இப்போது முன்வைத்திருக்கும் யோசனை அக்கறையடன் பரிசீலிக்கவேண்டியதாக இருக்கிறது. நீண்டகால நோக்கில் பதவிகளை வகிப்பதில் அபிலாசையைக் கொண்டிராத இரு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் நியமிப்பதற்கு சகல கட்சிகளும் இணங்கினால் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுவதில் இருந்து விலகத்தயாராயிருப்பதாக அவர் அறிவித்திருக்கிறார்.

அத்தகைய இரு பாராளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதியாகவும் பிரதமராகவும் நியமிக்கின்ற அதேவேளை நாட்டில் உறுதிப்பாட்டை ஏற்படுத்துவ தற்கு குறுகிய கால செயற்திட்டமொன்றுக்கும் சாத்தியமானளவு விரைவில் தேர்தல்களை நடத்துவதற் கும் கட்சிகள் இணங்கினால் இடைக்கால அரசாங்கம் ஒன்றில் பொறுப்புக்களை ஏற்றுக்கொள்ள முன்வருவதாகவும் திசாநாயக்க கூறியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

## அறகலயவுடன் தொடர்பாடல்

ஜே.வி.பி.யின் இந்த நியாயமான யோசனை அறகலய போராட்டக்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்புடையதாக அமையக்கூடியது சாத்தியம். இதை ஏற்றுக்கொண்டால் பதில் ஜனாதிபதி ஊரடங்கை பிறப்பிக்கவேண்டிய தேவை எழாது. பதவிக்கு வந்த பிறகு இரு தடவைகள் அவர் ஊரடங்கைப் பிறப்பித்தார். நிலைவரத்தைப் பொறுத்து கடுமையான படை பலத்தை பிரயோகிக்கலாம் என்று பாதுகாப்பு படைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அவசரகாலச் சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால், பொருளாதார அனர்த்தம் காரணமாக அதிகப்பெரும்பான்மையான மக்கள் தொடர்ந்தும் பெரும் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கி றார்கள் என்பதே முக்கிய பிரச்சினையாகும். வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதில் அவர்களுக்கு இருக்கும் நாட்டத்தை அடக்குவது கஷ்டம். இதன் காரணத்தினால்தான் போராட்டக்காரர்களை அடக்குவதற்கு பதிலாக அரசியல் தீர்வொன்றைக் காணுமாறு பாதுகாப்பு படைகளின் தலைவர்கள் அரசாங்கத்தை கேட்டுக்கொண்டார்கள். பாதுகாப்பு படைகளில் உள்ளவர்களின் குடும்பங்களும் இதே பொருளாதார பிரச்சினையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அண்மைய வாரங்களில் சர்வதேச ஊடகங்களின் கவனம் பெருமளவுக்கு இலங்கை மீது திரும்பியிருப்பதற்கான காரணத்தையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. இலங்கையில் நடைபெறுகின்றவை குறித்து சர்வதேச பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி அலைவரிசைகளும் செய்திகளையும் விவரணக் கட்டுரைகளையும் கிரமமாக வெளியிட்ட வண்ணம் இருக்கின்றன. நிராயுதபாணியான அமைதிவழிப் போராட்ட இயக்கம் பலம்பொருந்திய ஜனாதிபதியொருவரை நாட்டைவிட்டு விரட்டியதுடன் அரசாங்கத்தையும் கவிழ்த்தது என்பது சர்வதேச ஊடகங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியிருக்கிறது.

இலங்கை மக்களின் கிளர்ச்சியைப் பார்த்து உலகின் வேறு பாகங்களிலும் மக்கள் அரசாங்கங்களுக்கு எதிராக கிளர்ந்தெழக்கூடிய சாத்தியம் இருப்பதாக அந்த ஊடகங்கள் எதிர்பார்க்கின்றன. சர்வதேச கவனம் என்பது இரு புறமும் கூரான ஒரு வாள். வன்முறைகள் அதிகரித்து அரசாங்கம் அடக்குமுறையிலும் ஈடுபட்டால் முன்னர் போரின் இறுதிக்கட்டதில் இடம்பெற்றதாகக் கூறப்படுகான்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் வந்தது போன்று மீண்டும் நிலைமை உருவாகலாம்.

பாராளுமன்றத்தில் நடைபெறுகின்ற தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகுவது மாத்திரமல்ல சவால். முன்னணி சிவில் சமூக தலைவர்களையும் செயற்பாட்டாளர்களையும் கொண்ட ஒரு குழுவான “சீர்திருத்தங்களுக்கான கூட்டமைப்பு” ( Collective for Reforms) “தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் பாராட்டப்படுகின்ற அமைதிவழிப் போராட்ட இயக்கத்தின் பங்களிப்புகளை நாம் வரவேற்கிறோம். அரசாங்க கட்டிடங்களில் இருந்து அமைதியாக வெளியேறுவதற்கு போராட்டக்காரர்கள் எடுத்த தீர்மானத்தையும் நாம் மெச்சுகிறோம். ஜனநாயக எதிர்ப்பியக்கங்களை முன்னெடுப்பதற்கு மக்களுக்கு இருக்கும் உரிமையை அடக்கியொடுக்குவதற்கு அவசரகாலச்சட்டத்தையும் ஊரடங்கு பிரகடனத்தையும் நாடாமல் எதிர்கால இலங்கையில் உண்மையில் ஜனநாயக ரீதியானதும் சமத்துவக்கொள்கையுடையதுமான அரசியல் சமுதாயம் ஒன்றுக்கான நம்பிக்கையை வெளிப்படுத்தி நிற்கும் அறகலய இயக்கத்தின் பண்புகளை மதித்துச்செயற்படுமாறு நாம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கிறோம்”என்று அதன் அறிக்கையில் கூறியிருக்கிறது.

வலுவிழந்த ஆணை தான் இருக்கிறது என்பதை உணர்ந்துகொண்டு அகங்காரம் இல்லாமல் அறகலய இயக்கத்துடன் தொடர்பாடல்களைச் செய்து, சமாதானத்தையும் நீதியையும் உறுதிப்படுத்துகின்ற அதேவேளை சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்துவதே உண்மையான சவாலாக இருக்கும். ●

ஈழநாடு



# ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பாக கூட்டமைப்பிற்கு ஒரு பகிரங்க மடல்!

**யதீந்திரா**

**நா**ட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையை தொடர்ந்து, நாடாளுமன்ற வாக்களிப்பின் மூலம் ஜனாதிபதியை தெரிவு செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்பவர்கள் என்னும் வகையில், தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டும் அதே வேளை, உடனடி மற்றும் நீண்டகால அரசியல் நலன்களை கருத்தில் கொண்டும் செயலாற்ற வேண்டிய கடப்பாடு தங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு.

அடிப்படையில் இது தென்னிலங்கை சிங்கள தரப்புக்களிடையிலான அதிகாரப் போட்டியாகும். இதனை ஜனநாயகம் என்னும், ஒற்றைச் சொல் கொண்டு அளவிட முடியாது. இதனை ஜனநாயகம் என்னும் சொல் கொண்டு அளவிட முடியுமென்றால், ஒரு ஆசனத்தை கொண்டிருந்த, ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்ட போது, அவருக்கு அமெரிக்கத் தூதுவர் வாழ்த்துத் தெரிவித்திருக்க மாட்டார். அமெரிக்க தூதுவர் ஜனநாயக நெறிமுறைகளை அறியாமலா பேசியிருக்கின்றார்? எனவே வழமையான சொற்களின் வழியாக, தற்போதைய ஜனாதிபதிக்கான போட்டியை மதிப்பிட முடியாது.

கடந்த காலம், தமிழர் தரப்புக்களுக்கு போதிய அனுபவங்களை தந்திருக்கின்றது. ரணில்-மைத்திரி அரசாங்கத்தில், ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்ட போது, கூட்டமைப்பு ரணில் சார்புநிலையையே எடுத்திருந்தது. ரணிலுக்கு ஆதரவாக உள்ளுக்குள்ளும் வெளியிலும் பிரச்சாரங்களில் ஈடுபட்டது.

அன்றைய சூழலிலும் கூட - இது தென்னிலங்கையின் அதிகார மோதல், எனவே இதற்குள் கூட்டமைப்பு தலையிடாமல் இருப்பதுதான் நல்லதென்னும் அப்பிராயங்கள், என்னை போன்றவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தன. ஆனால் நீங்கள் எவற்றையும் பொருட்படுத்தவில்லை. அன்று நீங்கள் மேற்கொண்ட முடிவால், தமிழ் மக்களுக்கு கிடைத்த நன்மைகள் என்ன?

இப்போதும் முன்னரைப் போன்றதொரு நிலைமைதான் உருவாகியிருக்கின்றது. அன்று நீங்கள் ஆதரித்த ரணில் ஒரு பக்கமாகவும், கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது, நீங்கள் ஆதரித்த சஜித் பிரேமதாச இன்னொரு புறமாகவும் கதிரையை கைப்பற்றும் போட்டியில் ஈடுபடவுள்ளனர்.

ரணில் விக்கிரமசிங்க பொருத்தமற்றவர் என்றோ- அதே வேளை சஜித் பிரேமதாச பொருத்தமற்றவர் என்றோ, வாதிடக் கூடிய தகுதிநிலை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கில்லை. ஏனெனில் இருவரையுமே கடந்த காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரித்திருக்கின்றது.

அதிலும் குறிப்பாக, கடந்த ஆட்சிக் காலத்தில், கூட்டமைப்பு, ரணில் விக்கிரமசிங்கவுடன் இனைந்தே செயற்பட்டிருந்தது. அவரது ஆதரவுடன், புதியதொரு அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்னும் நம்பிக்கை மக்களுக்கு ஊட்டப்பட்டது. அன்று சரியானவராகவும் ஆற்றல் மிக்கவராகவும் தெரிந்த ரணில், இப்போது எவ்வாறு தவறானவராகவும் பொருத்தமற்றவராகவும் தெரிய முடியும்?

எனவே, மேற்படி இருவரில் யார் சிறந்தவர் என்னும் போட்டியில் கூட்டமைப்பு பங்குபற்ற முடியாது. பங்குபற்றவும் கூடாது. ஏனெனில் இருவருக்கிடையிலான போட்டியென்பது, தென்னிலங்கையின் பிரச்சினை. எவர் அதிகாரத்திற்கு வந்தாலும் அவருடன் பேசி, விடயங்களை வெற்றிகொள்வதற்கான தந்திரோபாயங்கள் தொடர்பில் சிந்திப்பதும், செயற்படுவதுதான் கூட்டமைப்பிற்கு முன்னாலுள்ள ஒரேயொரு அரசியல் தெரிவாகும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, புதிய ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பின் போது, நடுநிலைமை வகிப்பதே சிறந்தது - அதாவது வாக்கெடுப்பை தவிர்ப்பதே ஒரேயொரு சிறந்த தெரிவாக இருக்க முடியும்.

மேலும். நிலைமைகளை அவதானிக்கும் போது, சஜித் பிரேமதாச வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே இருப்பதாக தெரிகின்றது. ரணிலின் வெற்றிவாய்ப்பு தொடர்பிலும் இப்போது எதனையும் கூற முடியாது ஆனால், ஒரு வேளை அவர் வெற்றி பெற்றால் அவருடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை யும் இருக்கின்றது. இந்த அடிப்படையில் சிந்திக்கும் போதும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வாக்களிப்பில் பங்கு கொள்ளாமல் விடுவதே, தமிழ் மக்களின் நலனுக்கு சிறந்தது.

எனவே கடந்த கால அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டு, மக்களின் நலனை மட்டுமே முன்னிறுத்தி, அரசியல் தீர்மானங்களை எடுக்குமாறு, மக்கள் சார்பில் உங்களிடம் கோருகின்றேன். ஒரு கூற்றுண்டு - வரலாற்றின் தவறுகளை மறப்போர், அந்த தவறுகளை மீளவும் செய்ய சபிக்கப்பட்டவர்களாவர். மக்களை பிரதிநித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் வரலாற்று மறதியானது, இறுதியில் மக்களின் எதிர் காலத்தையே நாசப்படுத்துகின்றது.









# கோட்டாபய இந்தியா செல்வதை தடுத்தது தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை!

## ஈழத்தமிழர்களின் எதிர்ப்பை பெற விரும்பவில்லையாம்

இலங்கை அதிபராக இருந்த கோத்தபய ராஜபக்ச, அந்நாட்டு மக்கள் எதிர்ப்பு காரணமாக, மாலத்தீவு வழியாக சிங்கப்பூருக்கு தப்பி சென்றுள்ளார். அவர் இந்தியாவுக்கு தான் தப்பி வர முயன்றார். அதை தடுத்தது ஏன் என்ற புதிய தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து, உளவுத் துறை அதிகாரிகள் கூறியதாவது: இலங்கை தமிழர் பிரச்னையில் பிற இயக்கங்களை விட, சமீபகாலமாக தமிழக பா.ஜ.க, மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. பல மறைமுக வேலைகளையும் செய்து வருகிறது. ஒரு மாதத்துக்கு முன், தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, இலங்கை சென்று வந்தார். அங்கு, தமிழர்கள், தமிழின பிரதிநிதிகள், இலங்கை அரசு பிரதிநிதிகள், பல்வேறு கட்சி தலைவர்கள் என, பலரையும்சந்தித்து பேசினார்.





இலங்கையில் தான் சந்தித்த நபர்கள், அவர்களின் கருத்துக்கள், தமிழர் நலனுக்காக செய்ய வேண்டியவை குறித்த, நீண்ட அறிக்கை தயார் செய்து, மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளார். இந்த சூழ்நிலையில், இலங்கையில் மக்கள் புரட்சி வெடித்தது. அதிபர் கோட்டாபய ராஜபக்சவை அப்புறப்படுத்த, இலங்கை மக்கள் முடிவு எடுத்தனர். பல இடங்களிலும் வன்முறை வெடித்தது.

இதையடுத்து, இலங்கையில் இருந்து வெளியேற கோட்டாபய முடிவு எடுத்தார். துவக்கத்தில், அவர் செல்ல இருந்தது அமெரிக்கா. அவர் ஏற்கனவே அமெரிக்க குடியுரிமை பெற்றிருந்தவர். இலங்கையில் அதிபர் பொறுப்பேற்கும் முன், அதை ரத்து செய்தார்.எனினும், பழைய குடியுரிமையை கூறி, அமெரிக்காவுக்கு செல்ல துாதரகத்தை அணுகினார்.



ஆனால், அமெரிக்க துாதரக அதிகாரிகள் கை விரித்து விட்டனர். இதையடுத்து, இந்திய வெளியுறவுத் துறையில் இருக்கும் தன் நண்பர்கள் வாயிலாக, இந்தியாவுக்குள் தஞ்சம் புக முயற்சி செய்தார். இதற்காக, “யுஎல்- 229” என்ற விமானத்தை கோட்டாபய தேர்வு செய்தார்.

இந்த விமானம், இலங்கை தலை நகர் கொழும்புவில் இருந்து குவைத் நாட்டுக்கு செல்லக் கூடியது. கொச்சி வழியாக செல்லும் அந்த விமானத்தில் பயணித்து, கொச்சியில் இறங்கி விடுவது என்பது தான் கோட்டாபயவின் திட்டம். ஆனால், அது சரிபட்டு வராது என, இந்திய அரசு கோட்டாபயவிடம் கூறி விட்டது.

அதன் பின்னரே, கோட்டாபய, மாலத்தீவு வழியாக சிங்கப்பூருக்கு சென்றார். இந்தியாவுக்குள் கோட்டாபயவை அனுமதிக்க கூடாது என, மத்திய அரசு வாயிலாக தடை போட்டவர், தமிழக பா.ஜ.க, தலைவர் அண்ணாமலைதான்.

ஏராளமான இலங்கை தமிழர்கள், ராஜபக்ச அரசால் கொல்லப்பட்டனர். அதற்காக, தமிழகத்தில் உள்ள தமிழ் உணர்வாளர்கள், ராஜபக்ச குடும்பத்தினர் மீது கோபத்தில் உள்ளனர். இலங்கையில் 2009ம் ஆண்டு உள்நாட்டு போர் முடிந்து, 13 ஆண்டுகளுக்கு பின், அங்குள்ள தமிழர்கள் நிலை மாறியுள்ளது. அதற்கு இந்தியாவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமே காரணம். இலங்கை தமிழர்களுக்கு தேவையான உதவிகளை, பிரதமர் மோடி அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

எனவே, இலங்கை தமிழர்கள் பா.ஜ.க,வுக்கு ஆதரவான நிலையில் உள்ளனர். அண்ணாமலையின் இலங்கைப் பயணத்துக்கு பின், உலக அளவில், குறிப்பாக தமிழகத்தில் இலங்கை தமிழர் பிரச்னையில் பா.ஜ.கவின் அணுகு முறையை பலரும் பாராட்டி வருகின்றனர். இதை தொடர்ந்து, தமிழகத்தில் இருக்கும் ஈழ தமிழ் ஆதரவு குழுக்களின் ஆதரவை பெற, பா.ஜ., முயற்சித்து வருகிறது.

இந்த சூழ்நிலையில், ராஜபக்ச குடும்பத்தினருக்கு ஆதரவாக செயல்பட்டு, இலங்கை தமிழ் ஆதரவாளர்கள் எதிர்ப்பை சம்பாதித்து விடக் கூடாது என்பதில், தமிழக பா.ஜ., தெளிவாக உள்ளது. இதையடுத்தே, ராஜபக்ச குடும்பத்தினருக்கு, மத்திய அரசு ஆதரவு அளிக்கவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ......................................... (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ...................................................... குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ..........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................. (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை .............................. (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................ (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................. (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? /What / you : ............................................................................

ii) old / How / you? /are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ......................................................... (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : .........................................................................................

ii) அங்கே பாருங்கள் : ......................................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** 7 8 / 3 0 இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

.........................................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 06. | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| 07. | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| 08. | 1) நாற்று | 2) தாள் | |
| 09. | 1) மடமட | 2) தக தக | |
| 10. | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| 11. | 1) பாண் | 2) முகில் | |
| 12. | 1) Star | 2) Table | |
| 13. | 1) What do you like? | 2) How old are you? | |
| 14. | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| 15. | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| 16. | 8 730 | 17. 7 309 | |

### கல்வி tv CHANNEL-1

**19.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**19.07.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# முஸ்லிம்களின் பிரச்னையை தீர்ப்பதற்கு சிறந்த வாய்ப்பு!

## முஸ்லிம் எம்.பிக்களிடம் சுட்டிக்காட்டு

அம்பாறை, ஜூலை. 19

இலங்கை பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங் கிரஸ், தேசிய காங்கிரஸ், முஸ் லிம் தேசியக் கூட்டமைப்பு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த எல்லா முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது கட்சி களின் விருப்புவெறுப்புகளுக்கு அப்பால் சமூகத்தின் பிரச்னைகளை தீர்த்துவைத்தும் சக்தியும், ஆளுமையும், எண்ணமும் கொண்ட ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்க முன்வர வேண்டும் என சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா வேண்டுகோளொன்றை விடுத்துள்ளது.

அல்- மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா விடுத்துள்ள அறிக்கையில் -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி போன்ற தமிழ் மக்களின் சக்திமிக்க அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் செய்துவரும் நிலையில் முஸ்லிம் கட்சிகள் வழமை போன்று கண்களை மூடிக்கொண்டு வாசிக்குவலை வீசாமல் நிதானித்து முஸ்லிம் சமூகத்தின் பிரச்னைகளை தீர ஆராய்ந்து முடிவெடுக்க சிறந்த வாய்ப்பு கிட்டியுள்ளதாக இந்த சூழ்நிலையை அடிக்கோடிட்டு காட்ட விரும்புகிறோம்.

முஸ்லிம் சமூகத்தின் காணி மற்றும் நிலப்பிரச்னைகள், பிராந்திய பிரச்னைகள், உரிமை சார்ந்த விடயங்கள் என இலங் கையின் சகல பாகங்களிலும் பிரச்னைகள் அதிகமாக இருக் கின்றன. அவற்றைப் பட்டிய லிட்டு அந்த பிரச்னைகளை எழுத்து மூலம் ஒப்பந்தம் செய்து முஸ்லிங்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் ஆற்றலும், எண்ணமும் உள்ள வேட்பாளர்களை அணுகி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கடந்த காலங்களில் விட்ட தவறுகளை முன்னுதாரணமாக கொண்டு இந்த வாய்ப்பை பயன்படுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம் என தெரிவித்துள்ளது. (அ)

# தமிழ் கட்சிகள் ஒன்றுபடுவதே இன்றைய காலத்தின் தேவை!

## கோடீஸ்வரன் வலியுறுத்து

அம்பாறை, ஜூலை. 19

**தமிழ் மக்களின் இருப்பையும் உரிமை சார்ந்த விடயங்களையும் பாதுகாக்கின்ற செயற்பாட்டில் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஈடுபடவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.**



சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் புதிய ஜனாதிபதித் தெரிவு தொடர்பாக ஆலையடி வேம்பு பகுதியில் உள்ள அவரது அலுவலகத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அராஜகங்களை மேற்கொண்ட பொருளாதார ரீதியாக சீரழித்த மற்றும் சிறுபான்மை இனத்தின் இருப்பை அழிப்பதற்காக மத ரீதியான செயற்பாடுகளை முன்னெடுத்த மிக மோசமான ஒரு ஜனாதிபதி, அனைத்து மக்களாலும் துரத்தியடிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், புதியதொரு ஜனாதிபதி அனைத்து பாராளுமன்ற பிரதிநிதிகளினாலும் தெரிவு செய்யப்படவிருக்கின்றார். தமிழ்ப் பரப்பில் இருக்கின்ற தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்க்கப்பட்ட கட்சிகள் மற்றும் தமிழர் நலன் சார்ந்து செயற்படுகின்ற தமிழ்த் தேசிய பரப்புக்கு அப்பால் இருக்கின்ற மலையக கட்சிகள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பது முக்கியமானதாக இருக்கின்றது.

வட, கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுக்கு அதிகளவான பிரச்சினைகள் காணப்படுகின்றன. புரையோடிப்போயுள்ள இனப்பிரச்னை மட்டுமல்லாமல் ஏனைய இறைமை சார்ந்த பிரச்னைகள், எங்கள் இனம் சார்ந்த பிரச்னைகள் கூடுதலாக காணப்படுகின்றன.

விசேடமாக அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற தமிழர்களின் நலன் சார்ந்த விடயங்கள் கொடுக்கப்படுகின்ற கோரிக்கையானது உள்ளடக்கப்படவேண்டிய முக்கியமான ஒன்றாகியுள்ளது. வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமானது அம்பாறை மாவட்டமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழர்களின் இருப்பு என்பது தற்போது கேள்விக்குறியாக மாறியுள்ளது.அவர்களின் உரிமை சாரந்த விடயங்கள் இனம் சார்ந்த விடயங்கள் மதம் சார்ந்த விடயங்கள் இருப்பு சார்ந்த விடயங்கள் என்பன தற்போது கேள்விக்குறியாகி கவலைக்கிடமாகியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் மிக முக்கியமான பிரச்னையாக இருப்பது முதலாவது கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமை மறுக்கப்பட்டிருக்கின்றது.

இரண்டாது தொல்லியல் மற்றும் வன இலாக்காவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள விடயங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். தொல்லியல் என்ற போர்வையில் விகாரைகள் அமைக்கப்படுவதற்கான நடவடிக்கைள் மற்றும் தமிழர்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்ற நிலைமைகள் நிறுத்தப்பட வேண்டும்.இவ்வாறான விடயங்கள் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற முக்கியமான பிரச்னைகளாகும்.

அந்த வகையில், புதிய ஜனாதிபதி வேட்பாளர்களிடையே தமிழ் தேசிய கட்சிகள் இவ்வாறான விடயங்களை வேண்டுகோளாக முன்வைப்பது அவசியமாகும்-என்றார். (அ)

## அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின்

# கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்குக் கிளை

அம்பாறை, ஜூலை. 19

அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கல்முனை மாநகர சபை ஊழியர்களுக்கான கிளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. சங்கத்தின் கல்முனை தலைமையகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் வைத்து கிளையின் இணைப்பாளராக ப. பிரதீபனும், செயலாளராக எம். விக்னேஸ்வரனும் ஊழியர்களால் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

அதே போல இக்கிளைக்கு நிர்வாக உறுப்பினர்களாக சுகாதார பிரிவில் வி. தர்மராஜாவும், வேலை பகுதியில் எம்.ஏ. அனஸ்/ம், பாதுகாப்பு பிரிவில் டி. பாஸ்கரனும், சாரதிகள் சார்பாக எஸ். கேதீஸ்வரனும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக ஆலோசகராக க. பத்மராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநகர சபை நிர்வாகத்தின் அச்சுறுத்தல்கள், எதிர்ப்புகள், கெடுபிடிகள் ஆகியவற்றுக்கு மத்தியில் கிளையை வெற்றிகரமாக ஆரம்பித்து இருப்பதாக சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

# குப்பைகளினாலும், தூர்வாரப்படாத வடிகால்களாலும் சுகாதார சீர்கேட்டை எதிர்நோக்கும் கல்முனை மாநகர்

அம்பாறை, ஜூலை. 19

கல்முனை மாநகர பிரதேசங்களில் அண்மைக்காலமாக ஒழுங்கான திண்மக் கழிவகற்றல் இன்மை காரணமாக திண்மக்கழிவுகள் அரச மற்றும் தனியார் காரியாலயங்களுக்கு அருகிலும், பாடசாலைகளுக்கு அருகிலும், சந்திகளிலும், நீர்நிலைகள், மைதானங்கள், கடற்கரை ஓரங்கள் போன்ற பிரதேசங்களில் மக்கள் குவித்து வருகின்றனர்.

இதனால் இரவில் கட்டாக்காலி மாடுகளும், தெருநாய்களும் குப்பைகளை கிளறி விடுவதனால் பாரிய துர்நாற்றம் வீசுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அது மாத்திரமின்றி டெங்கு பரவும் இடங்கள் பல இந்த குப்பை கொட்டப்பட்டுள்ள இடங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் வடிகால்கள் கூட மண்களினால் நிரம்பி நீர் வழிந்தோட முடியாத நிலையில் உள்ளது. சில வடிகால் மூடிகள் நீண்டகாலமாக உடைந்து காணப்படுகின்றன. இதனால் வீதிப் போக்குவரத்தும் சில நேரங்களில் தடைப்படுவதாக மக்கள் விசனம் வெளியிடுகின்றனர். ஒழுங்கான திட்டமிடல்களோ, சரியான திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவமோ இல்லாதமையினால் இந்த நிலை உருவாகியுள்ளது.



இது தொடர்பில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயங்கள் கல்முனை மாநகர சபைக்கு அறிவித்திருந்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்து வருகிறது.

இந்த விடயங்களுக்கு பொறுப்பான கல்முனை மாநகர சுகாதாரப்பிரிவின் பொறுப்பதிகாரியான பிரதம சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எம்.ஜே. கே.எம். அர்ஷத் காரியப்பரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த பிரச்னையை நானும் என் கண்களினால் கண்டேன். இந்த விடயம் மாநகர சுகாதாரத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாரிய இழுக்காக காண்கிறேன். வடிகால் தூர்வாருதல் போன்றவை பொதுவசதிகள் பிரிவின் கீழ் வருவதனால் அவை ஆணையாளர், பிரதி ஆணையாளர் வசமே உள்ளது. குறைபாடுகளை தீர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கே உள்ளது.

எங்களின் சுகாதரப் பிரிவு கடந்த காலங்களில் குறைந்தளவு வளங்களை கொண்டு நிறைவான சேவையை வழங்கி வந்தோம். ஆனால் தற்போது சுகாதரப் பிரிவுக்கான வாகனங்கள் ஆணையாளர் கட்டுப்பாட்டில் இருப்பதனால் தின்மக்கழிவகற்றலை வெற்றிகரமாக முன்னெடுக்க முடியாமல் இருக்கிறது. இதனால் சுகாதரப்பிரிவின் சேவைகள் முடங்கி மந்தகதியிலையே இயங்குகிறது என்று தெரிவித்தார். (அ)



# ஆற்றுக்குள் பாய்ந்தது பஸ் 13 பேர் மரணம் பலர் மாயம்!

புனே, ஜூலை 19

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் ஆற்றுக்குள் பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 13 பேர் மரணமாகினர். பலர் காணாமல் போனார்கள்.

நேற்று இந்தூரில் இருந்து புனேக்கு சென்ற பேருந்தே கல்கோட் என்ற இடத்தில் நர்மதை ஆற்றைக் கடந்தபோது இந்த விபத்து இடம்பெற்றது.

இந்தப் பேருந்தில் 50 பேர் பயணித்தனர். 100 அடி உயர பாலத்தை பேருந்து கடந்த போது கட்டுப்பாட்டை இழந்து ஆற்றுக்குள் வீழ்ந்ததாகக் கூறப்பட்டது. பேருந்துக்குள் சிக்கி பயணிகள் வெளியே வர முடியாமல் தவித்தனர். அப்பகுதி மக்கள் அவர்களை மீட்டனர். ஆனா லும், ஆற்றில் மூழ்கி 13 பேர் உயிரிழந்தனர். 10 பேரின் சட லங்கள் உடனடியாக மீட்கப்பட்டன. 15 பேர் மட்டுமே உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர்.

அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில், அவர்களைத் தேடும் பணி இடம்பெற்று வருகின்றது.

(ஐ)

# சீனாவை தாக்கும் வெப்ப அலை; 90 கோடி மக்கள் பாதிக்கப்படலாம்!

பீஜிங், ஜூலை 19

சீனாவில் அடுத்த 12 நாட்களுக்கு கடும் வெப்பம் அலைகளுக்கான எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது. இதனால், 90 கோடி மக்கள் பாதிக்கப்படகூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



காலநிலை மாற்றம் காரணமாக சீனா முழுவதும் ஜூன் 13 ஆம் திகதியில் இருந்து கடுமையான வெப்ப அலைகள் பாதிப்புகளை ஏற்படுத்த தொடங்கின. இந்த வெப்ப அலைகள் தொடர்ந்து, ஒகஸ்ட் மாதம் 2ஆவது வாரம் வரை நீடித்திருக்கும் என்று குளோபல் ரைம்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது.

2022ம் ஆண்டுக்கான வெப்ப அலை முன்பே வந்து விட்டது என அந்நாட்டு வானிலை ஆய்வு மையத்துடன் தொடர்புடைய தேசிய வானிலை மையத்தின் மூத்த ஆராய்ச்சியாளர் சன் ஷாவோ கூறியுள்ளார். இதனால், வடமேற்கு சீனாவின் ஷாங்சி மாகாணத்தின் தென்கிழக்கு உள்ளிட்ட பகுதிகள் கிழக்கு சீனாவின் ஜெஜியாங் மாகாணத்தின் வடகிழக்கு பகுதிகளில் 40 பாகை செல்சியசுக்கும் கூடுதலான வெப்ப அலைகள் பாதிப்புகளை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, கடந்த ஜூனில் இருந்து கடுமையான வெப்பநிலை பதிவாகி வருகிறது. வடக்கு சீனாவின் ஹெபய் மாகாணத்தில் மொத்தம் 71 தேசிய வானிலை ஆய்வு மையங்களில் வெப்பநிலை சாதனை பதிவை கடந்து உள்ளது. அவற்றில் லிங்ஷூ நகரில் 44.2 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானது.

சீனாவின் தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் வருகிற 26ஆம் திகதி வரை கடுமையான வெப்பம் நிலவும். நாட்டின் பல பகுதிகளில் வருகிற 31ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 15ஆம் திகதி வரை முந்தைய ஆண்டுகளில் இல்லாத வகையில் மிக அதிக வெப்பம் பதிவாகும் என குளோபல் டைம்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது.

இந்த வெப்ப அலைகளால் 90 கோடி பேர் பாதிக்கப்படக்கூடும். ஒரு வாரத்தில் சீனாவின் பாதி நிலப்பகுதி பாதிப்புக்கு உள்ளாகும். இந்த நீடித்த வெப்ப அலைகளால் மக்களின் வாழ்வு மற்றும் பயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# அமெரிக்காவில் துப்பாக்கி சூடு; 3 பேர் உயிரிழப்பு; மூவர் காயம்!

நியூயோர்க், ஜூலை 19

அமெரிக்காவில் இண்டியானா நகரில் ஒரு வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் உயிரிழந்தனர். அத்துடன், 3 பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட மர்ம நபர் சுடப்பட்டு கைது செய்யப்பட்டார்.

இண்டியானா மாகாண ஆளுநர் கூறுகையில்,

கிரென்வுட் பார்க் மாலில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூன்று பேர் இறந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவில் ஆண்டுக்கு 40,000 மரணங்கள் துப்பாக்கிச் சூடு போன்ற சம்பவங்களால் நிகழ்கின்றன. அண்மைக்காலமாக இந்த துப்பாக்கிச் சூடு வன்முறை அதிகரித்துள்ளது.

ஜூலை 4 ஆம் திகதி அமெரிக்க சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது சிக்காகோவில் நடந்த பேரணியில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதில் 7 பேர் கொல்லப்பட்டனர். 30இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

மே 10 ஆம் தேதி பபலோ சுப்பர் மார்க்கெட்டில் கறுப்பினத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டனர். இதேபோல் டெக்சாஸில் பள்ளிக்கூடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 19 குழந்தைகள், 2 ஆசிரியைகள் உட்பட 21 பேர் கொல்லப்பட்டனர்.

அண்மைக்காலமாக அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு அமெரிக்க பாராளுமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான வாக்கெடுப்பு 20 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக வரும் வாரம் நடைபெறவுள்ளது. இதில் துப்பாக்கி கலாசாரத்திற்கு தடை கொண்டு வரும் பல்வேறு சட்டத்திருத்தங்கள் இடம்பெற்றுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# குழந்தையை மாடியிலிருந்து வீசிக் கொன்றன குரங்குகள்!

புதுடில்லி, ஜூலை 19

இந்தியாவில் உத்தர பிரதேச மாநிலத்தில் 4 மாத ஆண் குழந்தையை குரங்குகள் பறித்து 3 ஆவது மாடியிலிருந்து வீசி கொன்ற அதிர்ச்சி சம்பவம் நடந்தேறியுள்ளது.

உத்தர பிரதேசத்தின் பரேலி மாவட்டத்தில் துங்கா பகுதியில் வசித்து வரும் நபர் தனது 3 மாடி வீட்டின் மேல் தளத்தில் தனது 4 மாத ஆண் குழந்தையை கைகளில் சுமந்தபடி நடந்து சென்றுள்ளார்.

அங்கு கும்பலாக வந்த குரங்குகள் நடந்து சென்றவரின் அருகே சென்று அவரை திடீரென தாக்கின. இதனால், அவர் உதவி கேட்டு கத்தியுள்ளார். அங்கு ஆட்கள் வருவதற்கிடையே அவரிடம் இருந்த குழந்தையை குரங்குகள் பறித்துள்ளன.

மாடியின் மொட்டை மாடிக்கு சென்ற குரங்குகள் அங்கிருந்து குழந்தையை கீழே வீசின. இதில், குழந்தை உயிரிழந்தது. பின்னரும் அந்தக் குரங்குகள் குடும்ப உறுப்பினர்களையும் தாக்கியுள்ளன.

குழந்தைக்கு பெயர் சூட்டும் விழா நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றபோது இந்தத் துயர சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(ஐ)

# சீனாவில் கன மழை; 12 பேர் உயிரிழப்பு!

பீஜிங், ஜூலை 19

சீனாவின் வடமேற்கு மற்றும் தென்மேற்கு பகுதியில் தொடர்ந்து பெய்த கனமழை மற்றும் வெள்ளத்துக்கு 12 பேர் பலியாகினர் ஆயிரக் கணக்கானோர் வீடுகளை விட்டு பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற் றப்பட்டனர்.



இது குறித்து அரசு ஊடகங்கள் கூறியதாவது:

தென்மேற்கு மாகாணமான சிசுவானில் கடந்த ஒன்றரை நாள்களாக பெய்த கன மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர் 12 பேர் மாயமாகினர் 1,300 பேர் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேற்றப்பட்டனர்.

இதே போல், வடமேற்கு மாகாணமான கான்சுவிலும் மழை வெள்ளத்துக்கு 6 பேர் பலியாகினர். 3 ஆயிரம் பேர் வீடுகளை விட்டு அப்புறப் படுத்தப்பட்டனர் என்று அரசு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(ஐ)

# உக்ரைன்மீது தாக்குதல் 6 பொது மக்கள் மரணம்!

கீவ்,ஜூலை19

உக்ரைனின் டோரிட்ஸ் நகரில் நேற்று ரஷ்யா நடத்திய தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர்.



உக்ரைன் மீது ரஷ்ய படைகள் தொடர்ந்து தாக்குதல் நிகழ்த்திவரும் நிலையில், நேற்று காலை முதல் டோரிட்ஸ் நகரைக் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலில் நகரில் இருந்த இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று இடிந்து விழுந்துள்ளது. கட்டடத்தில் இருந்த மக்கள் பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர் என்று முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில், ஐந்து பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. மேலும் மூவர் மீட்கப்பட்ட நிலையில் இதில், ஒருவர் மருத்துவமனையில் உயிரிழந்தார்.

இந்தக் கட்டடத்தில் இதுவரை 6 பேர் கொல்லப்பட்டனர் என்று மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. (ஐ)

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் இலங்கை வலுவான நிலை!



காலி, ஜூலை 18

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 333 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டி காலியில் நடக்கிறது. இந்தப் போட்டியில் முதல் இனிங்ஸில் இலங்கை 222 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 218 ஓட்டங்களைப் பெற்றது.

இந்நிலையில், இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நேற்று முன்தினம் ஆட்டம் முடிவடையும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஒஸத பெர்னாண்டோ 17, கசூன் ராஜித 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் ஆரம்பமானபோது இவர்கள் இருவரும் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர். ராஜித 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து குசல் மெண்டிஸ் களமிறங்கினார். இருவரும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்து அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஒஸத பெர்னாண்டோ தனது 6ஆவது டெஸ்ட் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்து 64 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். குசல் மெண்டிஸ் 15ஆவது அரைச்சதத்தை அடித்து 76 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இவரின் பின்வந்த அனுபவ வீரரான அஞ்சலோ மத்தியூஸ் 9 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். அதன் பின்பு களமிறங்கிய தினேஷ் சந்திமால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், பின் வரிசை வீரர்கள் அவருக்கு ஒத்துழைக்கவில்லை.

தனஞ்சய 20, நிரோசன் டிக்வெல்ல 12, ரமேஷ் மெண்டிஸ் 22, மஹீஸ் தீக்ஷன 11 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர். மறுபுறத்தில் அரைச்சதத்தை கடந்து சிறப்பாக சந்திமால் துடுப்பெடுத்தாடினார்.

இறுதி விக்கெட்டுக்காக களமிறங்கிய பிரபாத் ஜெயசூரிய தடுப்பாட்டத்தைக் கையாண்டார். இதனால், நேற்றைய நாள் ஆட்டம் முடியும் வரை விக்கெட் விழவில்லை. ஆட்டம் முடிவடைந்த போது தினேஷ் சந்திமால் 86 ஓட்டங்களுடனும், பிரபாத் ஜெய சூரியா 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இலங்கை அணி 9 விக்கெட்கள் இழப்புக்கு 329 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில் முஹமட் நவாஸ் 5 விக்கெட்களையும் யசீர் ஷா 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)



## ஐ. பி. எல். போட்டி நடத்த வசதியாக இரண்டரை மாதம் ஒதுக்கும் ஐ. சி.

புதுடில்லி, ஜூலை 19

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.). வருங்கால போட்டி அட்டவணையில் ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட்டுக்கு ஒவ்வோர் ஆண்டும் இரண்டரை மாதங்கள் ஒதுக்கப்படும் என்றும், அதற்காக பல்வேறு நாட்டு கிரிக்கெட் சபைகளிடம் பேசி இருப்பதாகவும் இந்திய கிரிக்கெட் சபையின் செயலாளர் ஜெய் ஷா சமீபத்தில் கூறியிருந்தார்.

இந்த நிலையில் 2023ஆம் ஆண்டு மே முதல் 2027ஆம் ஆண்டு ஏப்ரல் வரை நடைபெறும் சர்வதேச கிரிக்கெட்டுக்கான உத்தேச போட்டி அட்டவணையில் ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கு என்று இரண்டரை மாதங்களை ஐ.சி.சி. ஒதுக்கி இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தாவது ஐ.பி.எல். நடக்கும் இந்த இரண்டரை மாதங்களில் வேறு எங்கும் சர்வதேச போட்டிகள் நடக்காது. வழக்கமாக ஐ.பி.எல். கிரிக்கெட் மார்ச் கடைசி வாரத்தில் தொடங்கி மே மாதம் வரை நடை பெறும். இனி ஜூனிலும் முதல் 2 வாரங்கள் நீடிக்கும். ஐ.பி.எல். போட்டிக்கு கூடுதல் நாட்கள் ஒதுக்கப்படுவதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. ஆனால், மற்ற நாடுகளின் ஆதரவு இருப்பதால் ஐ.சி.சி.யின் போட்டி அட்டவணைக்கு ஒப்புதல் கிடைத்து விடும். வருகிற 25 மற்றும் 26ஆம் திகதிகளில் பர்மிங்ஹாமில் நடக்கும் ஐ.சி.சியின் ஆண்டு பொதுக்குழு கூட்டத்தில் இதற்கான அட்டவணை இறுதி செய்யப்படும் என்று தெரிகிறது.



## இரண்டாவது டெஸ்ட் இடம் மாற்றப்பட்டது!

கொழும்பு, ஜூலை 19

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இடம் மாற்றப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை நேற்று அறிவித்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் பேச்சு நடத்தி இந்த மாற்றத்தை செய்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை குறிப்பிட்டது.

இதற்கமைய கொழும்பு. ஆர். பிரேமதாச விளையாட்டரங்கில் நடைபெறவிருந்த இரண்டாவது டெஸ்ட் போட்டி காலி சர்வதேச விளையாட்டரங்குக்கு மாற்றப்பட்டுள்ளது.

கிரிக்கெட் சுற்றுப் பயணம் தொடர்பான திட்டமிடல் சவால்களை சமாளிக்கும் நோக்கத்துடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இரண்டாவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

## இந்தியாவுடனான் தொடர் மேற்கிந்திய அணி அறிவிப்பு

ரினிடாட், ஜூலை 19

இங்கிலாந்து சுற்றுப் பயணத்திலுள்ள இந்திய அணி, அடுத்து மேற்கிந்தியத் தீவுகளுக்கு செல்லவுள்ளது. அங்கு 3 ஒருநாள், 5 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

ஒருநாள் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதியும், இருபது - 20 தொடர் எதிர்வரும் 29ஆம் திகதியும் ஆரம்பமாகின்றன.

இந்தத் தொடருக்கு இந்திய அணிக்கு ஷிகர் தவான் தலைமை தாங்குகிறார். ரோஹித் சர்மா, கோலி, பாண்ட்யா, பும்ரா, பந்த், ஷமி ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக கே. எல். ராகுலும் அணியில் இல்லை.

இந்நிலையில் டிரினிடாட்டில் நடைபெறும் ஒருநாள் தொடரில் விளையாடவுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் விளையாடிய 15 ஒருநாள் ஆட்டங்களில் 4இல் மட்டுமே மே.இ. தீவுகள் அணி வெற்றி பெற்றுள்ளது. கடைசியாக விளையாடிய 6 ஆட்டங்களிலும் தோல்வி அடைந்துள்ளது. இதனால் இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை வெல்லவேண்டிய நெருக்கடியில் உள்ளது.

அணி விவரம்: நிக்கோலஸ் பூரண் (தலைவர்), ஷாய் ஹோப் (உபதலைவர்), புரூக்ஸ், கேசி கார்டி, ஜசன் ஹோல்டர், அகேல் ஹூசைன், அல்ஸாரி ஜோசப், பிரண்டன் கிங், கெய்ல் மேயர்ஸ், குடாகேஷ் மோட்டி, கீமோ பால், ரோவ்மேன் பவல், ஜேசன் சீல்ஸ்.





## உலக தடகள சம்பியன்ஷிப் தங்கம் வென்று சாதித்த தாய்!

ஜமைக்கா, ஜூலை 18

35 வயது தாய் உலகின் அதிவேக வீராங்கனையாக சாதித்துக் காட்ட முடியுமா? முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ஜமைக்காவின் ஷெல்லி ஆன் பிரேசர் பிரைஸ்.

இவர் உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 100 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வென்று சாதனை படைத்துள்ளார். 10.67 செக்கன்களில் தூரத்தைக் கடந்து உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் தனது 12ஆவது பதக்கத்தை வென்றார்.

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் உசைன் போல்ட், அலிசன் பெலிக்ஸ் ஆகியோர் மட்டுமே ஷெல்லியை விடவும் அதிக பதக்கங்களை வென்றுள்ளார்கள்.

உலக தடகள சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டத்தில் இவர் வென்ற 5ஆவது தங்கம் இது (2009, 2013, 2015, 2019, 2022). உசைன் போல்ட் 3 முறை மட்டுமே தங்கம் வென்றுள்ளார். ஒலிம்பிக்கில் 2008, 2012இல் 100. மீற்றர் ஓட்டத்தில் ஷெல்லி, தங்கம் வென்றுள்ளார்.

“இது தாய்மைக்குக் கிடைத்த வெற்றி. ரோக்கியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்றேன். தங்கம் வெல்லாததால் ஊருக்குத் திரும்பி கடுமையாக உழைத்தேன். என்னை இன்னும் மேம்படுத்திக்கொண்டு இப்போட்டிக்கு வந்து வெற்றி பெற்றுள்ளேன். ஒரு பெண் 35 வயதைக் கடந்துவிட்டால் அவருடைய திறமை மங்கிவிடும் எனப் பலரும் எண்ணுகிறார்கள். என்னால் இப்போது போட்டியிட்டு தங்கம் வெல்ல முடிகிறது - என்றார். (ஐ)

## ரணிலின் தேசியப்பட்டியல் நியமனத்துக்கு எதிரான மனு மீதான தீர்ப்பு இன்று வருகிறது

கொழும்பு, ஜூலை 19
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பதன் மூலம் நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று குறிப்பிடும் படியும், மேற்படி நியமனத்தை செல்லுபடியற்ற உத்தரவிடும்படியும் கோரி, நாகானந்த கொடித்துவக்கு தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பான தீர்மானம் இன்று அறிவிக்கப்படும் என உயர் நீதிமன்றம் நேற்று தெரிவித்துள்ளது.

காமினி அமரசேகர, ஜனக் டி சில்வா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த அடிப்படை உரிமை மனு நேற்று பரிசீலிக்கப்பட்டது.

இந்த மனுவில் தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பதில் ஜனாதிபதி திரு ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 11 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா, இந்த மனு தொடர்பில் இரண்டு அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

அரசியலமைப்பின் விதிகளின்படி, அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 30 நாட்களுக்குள் ஆரம்ப அவசர மனு தாக்கல் செய்யப்பட வேண்டும், ஆனால் ஒரு வருட காலத்திற்குப் பிறகு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்

பிரதி சொலிசிட்டர் ஜெனரல் முன்வைத்த உண்மைகளுடன் தாம் உடன்படுவதாகவும், அதன்படி மனுவை விசாரணையின்றி நிராகரிக்குமாறும் பதில் ஜனாதிபதி சார்பில் முன்னிலையான ரொலண்ட் பெரேரா தெரிவித்தார்.

இருதரப்பும் முன்வைத்த உண்மைகளை கருத்தில் கொண்ட நீதிமன்றம், இந்த மனுவை விசாரிப்பதா இல்லையா என்பது குறித்து இன்று தீர்ப்பு வழங்கப்படும் என தெரிவித்து வழக்கை ஒத்தி வைத்தது. (அ)

# தப்பி சென்ற கோட்டாவுக்கு சிங்கப்பூரிலும் தலையிடி!

கொழும்பு, ஜூலை 19
எவரும் அனுமதி இன்றிப் பேசுவதற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கவும் வசதியாக சிங்கப்பூரிலும் “ஸ்பீக்கேர்ஸ் கோர்ணர்” என்று ஒர் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் கூடிய சிலர் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிங்கப்பூர் அரசு நாட்டுக்குள் தங்க இடமளித்திருப்பதற்குத் தங்கள் எதிர்ப்பைத் வெளியிட்டுள்ளனர்.

கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூரில் சென்று இறங்கியது முதல் அங்கு அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையோ ஒன்று கூடல்களையோ நடத்துவதற்கு அந்நாட்டுப் பொலிஸார் அங்குள்ள சட்டங்களின் கீழ் தடைவிதித்திருக்கின்றனர்.

இதனால் அவருக்கு எதிரான குரல்கள் அங்கு தடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியிலேயே ஸ்பீக்கேர்ஸ் கோர்ணர்” இடத்தில் ஒரிருவர் கூடி எதிர்ப்பு நிகழ்வை நடத்தியுள்ளனர்.

2020 தேர்தலில் மக்கள் குரல் என்ற கட்சி சார்பில் வேட்பாளராக நின்றபிரபு ராமச்சந்திரன் என்பவர் அந்த எதிர்ப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தார் என்று சிங்கப்பூரின் ஆங்கில செய்திப் பத்திரிகையான தஸ்ரெயிட்ஸ் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அங்கு உரையாற்றிய அவர், “கோட்டாபய விவகாரம் குறித்து சிங்கப்பூரில் பேசுவது மிகக் கடினமான விடயம். ஆனாலும் நாங்கள் அது பற்றி சர்வதேச சமூகத்துக்கு உரத்த குரலில் தெரிவிக்கவேண்டிய அவசியம் உள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ இங்கேதான் இருக்கிறார் என்பதைஉலகத்துக்குக் கூறவேண்டியிருக்கிறது. ” அவர் விரும்பத் தகாதவர். அரசியல்ரீதியாகத் தன்னை வெளிப்படுத்திய ஒருவர். கடவுச்சீட்டு வைத்திருக்கின்ற ஏனைய இலங்கையர்களைப் போன்று அவரையும் கருதிவிட முடியாது. எதற்காக நாங்கள் அவரைநாட்டுக்குள்ளே எடுத்திருக்கிறோம்?” - என்று பிரபு ராமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார். அவரோடு மக்கள் குரல் கட்சியின் மற்றொரு வேட்பாளராகிய லியோங் சீ ஹுயன் என்பவரும் எதிர்ப்பு நிகழ்வில் கலந்து கொண்டார். அவர்கள் இருவரும் கோட்டாபய விவகாரம் மீது கவனத்தை ஈர்ப்பதற்கு சமூக ஊடகங்கள் மூலமாகவும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

பெரும் நிதி நெருக்கடியில் நாட்டைச் சிக்க வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிய ஒருவர் எதற்காகத் தான் பதவி விலகிய பின் மறைந்து வாழ சிங்கப்பூரைத் தெரிவு செய்தார்? எனவே இங்குள்ள அவரது சொத்துக்கள் பற்றியும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை, சிங்கப்பூரின் செயல் அதிர்ச்சியம் வருத்தமும் அளிப்பதாகத் தனது பெயரை வெளியிட விரும்பாத தென்னாசியப்பின்னணி கொண்ட சிங்கப்பூர் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் உள்ள இலங்கையர்கள் எவருமே அவர்கள் தமிழராக இருந்தாலும் சிங்களவராக இருந்தாலும் சரி கோட்டாபய தம் அருகில் இருப்பதை வெறுக்கவே செய்வர் என்று அந்த சட்டத்தரணி ஸ்ரெயிட்ஸ் ரைம்ஸ்பத்திரிகையிடம் கூறியுள்ளார்.

சிங்கப்பூர் சட்டங்களின் படி சிங்கப்பூர் பிரஜைகள், வதிவிட அனுமதி பெற்றவர்கள், தொழில் வீஸா வைத்திருப்போர் மற்றும் சாதாரண சமூக வீஸாவில் வருகை தந்து தங்கியிருப்போர் என்று எவருமே கோட்டாபயவுக்கு எதிராக எதிர்ப்பைத் தெரிவிக்க முடியாது. அதனை அந்நாட்டுப் பொலிஸார் பகிரங்கமாக அறிவித்துள்ளனர்.

“ஸ்ரெயிட்ஸ் ரைம்ஸ்” இலங்கை விவகாரங்களுடன் நெருக்கமான தொடர்புடையவர்கள், இலங்கைப் பின்னணி கொண்ட சிங்கப்பூர் பிரஜைகள் மற்றும் சிங்கப்பூரில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகள் சுமார் இருபது பேரைத் தொடர்பு கொண்டு கோட்டாபய விவகாரம் தொடர்பாகக் கருத்தறிய முற்பட்டது என்றும் ஆனால் அவர்கள் எவருமே கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டனர் என்றும் அதன் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை உலகளவில் உள்ள சிங்கப்பூர் தூதரகங்களுக்கு முன்பாக இன்று போராட்டம் நடத்துவதற்கு தமிழ் அமைப்புகள் நடவடிக்கை எடுத்துள்ளன. (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு
19 - 10 - 1974

உதிர்வு
17 - 07 - 2022

### பூவலிங்கம் யசோகரன்

(கோபி ஸ்ரோர் - பூவலிங்கம் கடை , விஜி பல்பொருள் வாணிபம் (நாச்சிக்குடா ) , கரன்ஸ் என்ரபிரைசஸ் , பூமா ரெக்ஸ் (வவுனியா) உரிமையாளர்)

நாச்சிக்குடா மற்றும் வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட பூவலிங்கம் யசோதரன் நேற்றுமுன்தினம் (17.07.2022) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் பூவலிங்கம் - பூமாதேவி தம்பதியின் மகனும் வைத்திலிங்கம் - செல்வபாக்கியம் தம்பதியின் மருமகனும் பங்கயச்செல்வி (ஆசிரியை)யின் கணவரும் கம்சத்வனி (மகாஜனா) கஜானன் (மகாஜனா) அபராஜிதன் (மகாஜனா) தந்தையும் ஆவார்.

கோமதி (விஜி), கலைமதி , சிவமதி, வசந்தமலர், இந்துமதி, நேசகரன் ஆகியோரின் சகோதரனும் உமாபதி, திருநாவுக்கரசு, கோணேஸ்வரன், நவனந்தினி, வவிதரன், ஜீவகுமார் , ஞானசீலன், முரளிதரன் ஆகியோரின் மைத்துனரும் ருஜந்த், ஜெனுஜன், ஜெனுஜா, நிந்துஜன், நிந்துஜா, நந்துகி, ஜீசாகி, இயல்தமிழ், சுகாஸ்த்திகா, ஆதிரை ஆகியோரின் மாமனாரும் நங்கை, நிலன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மல்லாகம், அளவெட்டி மயானத்தில் நேற்று (18.07.2022) திங்கட்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

42/8 பங்களா வீதி.
மல்லாகம்.

தகவல்:
குடும்பம் மற்றும்
உடன்பிறந்தோர்.

## இலங்கையில் மீண்டும் கொரோனா அபாயம்!

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 19
இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக்கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

குறிப்பாக உலகம் முழுவதும் பரவி வரும் கொரோனா வைரஸின் புதிய மாறுபாடு இலங்கைக்குள் நுழையும் அபாயம் இருப்பதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனாவின் புதிய மாறுபாடு நாட்டிற்குள் நுழைந்ததா என்பதை கண்டறிய வேண்டும் என அதன் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேலும் 34 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.இதனையடுத்து, நாட்டில் பதிவான மொத்த கொரோனா பாதிப்புகளின் எண்ணிக்கை 6 இலட்சத்து 64 ஆயிரத்து 414 ஆக பதிவாகியுள்ளது. (அ)

## மேலும் 21,000 மெற்றிக் தொன் உரம் இந்தியாவிலிருந்து 2 வாரத்தில் வரும்

கொழும்பு, ஜூலை 19
அடுத்த இரண்டு வாரங்களில் இந்தியாவில் இருந்து மேலும் 21,000 மெற்றிக் தொன் உரம் நாட்டிற்கு வரவுள்ளது.

இந்திய கடன் வரி மூலம் இந்த உரம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் வரி மூலம் கொள்முதல் செய்யப்பட்ட 65,000 மெற்றிக் தொன் உரத்தில் இருந்து மொத்தம் 44,000 மெற்றிக் தொன் உரம் கடந்த வாரம் நாட்டிற்கு வந்துள்ளது.

லங்கா உர நிறுவனம் மற்றும் வர்த்தக உர நிறுவனம் ஊடாக விவசாயிகளுக்கு உரம் விநியோகிக்கப்படும்.

இதேவேளை, உரம் விநியோகிப்பதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு நிதி வழங்குமாறும் விவசாய அமைச்சர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் உர விநியோகம் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## கடலில் தத்தளித்த 2 ரஷ்யர்கள் மீட்பு!

கொழும்பு, ஜூலை 19
ஹிக்கடுவ பனங்கொடை கடற்பரப்பில் நீராடச் சென்ற ரஷ்ய பிரஜைகள் இருவர், கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், பொலிஸ் உயிர்காக்கும் படையினர் மற்றும் கடற்படையின் உயிர்காக்கும் படையினரால் மீட்கப்பட்டதாக ஹிக்கடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட இரண்டு ரஷ்ய வெளிநாட்டினர் 27 மற்றும் 29 வயதுடையவர்கள்.

ஹிக்கடுவ பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த இருவரும் நேற்று முன்தினம் மதியம் ஹிக்கடுவ பனங்கொட கடற்கரைக்கு நீராட வந்துள்ளனர்.

அவர்கள் கடலில் நீந்திக் கொண்டிருந்தபோது, நீரோட்டத்தில் சிக்கி சுமார் 800 மீற்றர் ஆழமான கடலில் அடித்துச் செல்லப்பட்டனர். (அ)

## இலங்கை...

ஒன்றை அவர் விடுத்தார்.

எந்தவிதமான வன்முறையிலிருந்தும் விலகி பொது நலனுக்கான உரையாடல் செயல்முறையை ஆரம்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்வதில் நாட்டின் மதத் தலைவர்களுடன் தானும் இணைவதாக பாப்பரசர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

## போராட்டக்...

குற்றப் புலனாய்வு திணைக்களம் (சி. ஐ. டி. )ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை. எனினும், குற்றப் புலனாய்வுத் துறையினர் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ரட்டா, திலான் சேனாநாயக்க மற்றும் அவிஷ்க விராஜ் கோணர என அழைக்கப்படும் இரத்திது சேனாரத்ன ஆகிய மூன்று செயல்பாட்டாளர்கள் கடந்த வாரம் இலங்கை வங்கியின் யூனியன் பிளேஸ் கிளையில் மூன்று புதிய கணக்குகளை ஆரம்பித்துள்ளனர். இந்த மூன்று கணக்குகளுக்கும் வெளிநாடுகளில் இருந்து 45 மில்லியன் ரூபா வைப்புச் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது.

இந்த பண வைப்பு செய்யப்பட்ட சில மணிநேரங்களுக்குப் பிறகு வங்கிக்கு வந்தனர் என்று கூறப்படும் குறித்த மூவரும் முழுத் தொகையையும் திரும்பப் பெற்றனர் என்றும் பணத்தைப் பெற்றதற்கான காரணத்தை விசாரித்த வங்கி அதிகாரிகளை அச்சுறுத்தினர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கூட்டமைப்பு...

மேலும், இந்தக் கூட்டம் ஆரம்பமான சில நிமிடங்களில் அங்கு, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி பதவிக்காக போட்டியிடுபவருமான சஜித் பிரேமதாஸ வந்துள்ளார். சம்பந்தனின் சுகநலனை விசாரிக்கவே அவர் அங்கு வருகை தந்தார் என்று கூறப்பட்டது.

சிறிதுநேரம் அங்கிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் பேசிவிட்டு சென்றுள்ளார். இதன்போது, அவர் தனக்கான ஆதரவுக் கோரிக்கை எதையும் முன் வைக்கவில்லை.

இந்நிலையில், சஜித் பிரேமதாஸவின் வருகை தற்செயலாக நிகழ்ந்தது என்று கூறப்பட்டபோதும், அண்மைக்காலமாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக செயல்படும் கூட்டமைப்பு எம். பியின் ஏற்பாடே இது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில், தமிழ் மக்களுக்கான தீர்வு நிபந்தனைகளுடன் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கலாம் என்ற கருத்தை சில எம். பிக்கள் முன்வைத்தனர்.

ஆனால், ரணிலுக்கு ஆதரவு தெரிவிப்பது தமிழ் மக்களின் எதிர்பை மட்டுமல்ல, போராட்டக்காரர்களின் எதிர்ப்பையும் சம்பாதிக்கும் என்று சுமந்திரன், சாணக்கியன் எம். பிக்கள் குறிப்பிட்டனர்.

இந்த விடயத்தில் தென்னிலங்கையின் விவகாரங்களில் நாம் அதிகம் தலையிடத் தேவையில்லை என்று சில உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில் இந்த வாக்கெடுப்பை புறக்கணிக்கலாம் என்று சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்தை முன்வைத்தனர். இதற்கு 6 வரையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தபோதிலும் இறுதி முடிவு எட்டப்படவில்லை.

எது எப்படி இருப்பினும் இன்றைய தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் கூடி இறுதி முடிவை எட்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கோட்டாபயவை...

அரசாங்கம் அழுத்தம் கொடுத்ததாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

இந்த நிலையிலேயே அந்த செய்தியை கோட் டாபய ராஜபக்ஷவின் பிரத்தியேக செயலாளர் மறுத்துள்ளார். (ஐ-சி)

## ஜனாதிபதி...

சூழ்நிலையில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு குறிப்பிட்ட காலத்துக்கு ஒன்றிணைந்த இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவது காலத்தின் தேவையாகும். நிராகரிக்கப்பட்ட தலைவர்களிடம் மேலும் நாட்டின் ஆட்சியை கையளிப் பது சிறந்த விடயமல்ல.

அனைவரினதும் நம்பிக்கையையும் வெற்றி கொள்ளக்கூடிய இடைக்கால ஜனாதிபதி மற்றும் பிரதமரை நியமிக்க உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

அவ்வாறு இல்லாவிடில், நிலைமை மேலும் மோசமாகும் என்பதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும் - என கூறப்பட்டுள்ளது. (அ)

## கட்சி...

மக்கள் போராட்ட பிரஜைகள் நிற்கும் என்று அந்த அமைப்பின் செயலாளர் சானக பண்டார இதன் போது தெரிவித்தார்.

மேலும், “எத்தகைய சவால்கள் வந்தாலும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் மக்களின் வளர்ச்சிக்காகவும் முடிந்த அனைத்தையும் செய்வோம் - என்றும் கூறினார்.

இதனிடையே, சில செயல்பாட்டாளர்கள் தேசிய கொடியை தவறாகப் பயன்படுத்தினர், தொல்பொருள் இடங்களுக்கு சேதம் விளைவித்தனர் என்று சிற்றிசன் பவர் அமைப்பின் பிரதிநிதிகள் குழு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது. (ஐ)

## ஜனாதிபதி தெரிவு...

ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள். அது மட்டுமின்றி நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள அடிப்படை மாற்றம் மற்றும் தெற்கு மக்களின் எதிர்பார்ப்புகளுக்குக் கிட்டவாகக்கூட போட்டியாளர்கள் இல்லை.

இந்த நிலையிலேயே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வாக்கெடுப்பில் பங்கேற்கப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளது. கட்சியின் மத்திய குழு கூடி ஏகமனதாக இந்த முடிவை எடுத்தது.

ஜனாதிபதி தெரிவில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பில் கட்சியின் மத்திய குழு கூடி ஆராய்ந்த போது, ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் முன்மொழியப்பட்டபோது எடுத்த வேகத்திலேயே அனைவராலும் நிராகரிக்கப்பட்டது. இன்று நாட்டின் குழப்பங்களுக்கு அவரும் காரணம். கோட்டாபய ராஜபக்ஷவின் தொடர்ச்சியாகவே அவரும் உள்ளார். தமிழ் மக்களின் இனப் பிரச்னை தீர்வு விடயத்தில் அவர் கடந்த காலத்தில் நேர்மையாக நடந்ததில்லை என்பதாலேயே அவர் நிராகரிக்கப்பட்டார்.

சஜித் பிரேமதாஸ மாற்று நிலைப்பாட்டை கொண்டிருப்பார் என்று நினைத்தோம். ஆனால், அவர் அப்படி இருக்கவில்லை. அவருடன், நடத்திய கலந்துரையாடலில் இந்தியாவிலுள்ள பஞ்சாயத்து முறைமையை இனப் பிரச்னைக்கு தீர்வாகக் கூறுத்கிறார். அவருக்கு இனப் பிரச்னையின் ஆழம் புரியவில்லை. இதனால், அவரையும் மத்திய குழு நிராகரித்தது.

தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்கவின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசினோம். தமிழர் பிரச்னை தீர்வு விவகாரத்தில் அவர்களுக்குள்ளேயே சரியான புரிதல் இல்லை. புதன்கிழமைக்கு முன்னர் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நிலைப்பாட்டுக்கு வர முடியாது. உத்தரவாதம் இல்லாமல் நாம் அவர்களுக்கு ஆதரவு வழங்க முடியாது - என்றும் அவர் கூறினார். (ஐ)



# ‘அரகலய’ போராட்டக் குழு ரிசாத் எம்.பியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜுலை 19

காலிமுகத்திடல் ‘அரகலய’ போராட்டக் குழுவினரின் பிரதிநிதிகள், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்களை நேற்று கட்சி அலுவலகத்தில் சந்தித்தனர்.

இதன்போது, நாளை புதன்கிழமை புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வது தொடர்பில், ‘அரகலய’ பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன், அவர்கள் அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் தமது கருத்துக்களையும், தாம் கொண்டிருக்கும் திட்டங்களையும் வெளிப்படுத்தினர். அத்துடன், அது தொடர்பான ஆவணத்தையும் கையளித்தனர்.

தொடர்ச்சியாக அரசியல் கட்சிகளுடன் ‘அரகலய’ போராட்டக் குழுவினர் நடத்தி வரும் பேச்சின் ஒரு கட்டமாகவே இந்த சந்திப்பு இடம் பெற்றது என்று ரிசாத் எம். பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

# இலங்கைக்கு உதவ அமெரிக்கா முன்வருகை

கொழும்பு, ஜுலை 19

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அமெரிக்கா உதவ முன்வருவதற்கு தயாராகவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் பக்க பதிவொன் றில் மூலம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன் அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் அடிப்படையிலேயே இவ் வாறு அமெரிக்கா உதவ முன்வந்துள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (அ)

## தமிழ்த்...

இந்த சந்திப்புக்களின்போது, ஜனாதி பதி பதவிக்கு போட்டியிடுபவர்களுக்கு தமிழ் மக்களின் கோரிக்கைகள் அடங்கிய வரைவு ஒன்றை இறுதி செய்யப்படவிருந்தது. ஆனால், கட்சித் தலைவர்கள் தவிர, பாராளுமன்ற உறுப்பினர்களும் இதனைப் பார்வையிட வேண்டும் என்பதால், நேற்றைய தினம் அந்த வரைவு இறுதி செய்யப்படவில்லை. நாளை பாராளுமன்றில் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இன்று காலைக்குள் இந்த வரைவை இறுதி செய்து வேட்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாம்?

கொழும்பு, ஜுலை 19

தற்போது நிலவும் எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு டீசல் பற்றாக்குறையால் பல மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், மின் உற்பத்தி நிலையங்களுக்கு எண்ணெய் இன்னும் இரண்டு நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதே நிலை நீடித்தால் மின்வெட்டு காலத்தை அதிகரிக்க வேண்டிய நிலை ஏற்படும். (அ)

## பேருந்து...

விலைக் குறைப்புக்கு ஏற்ப பேருந்து கட்டணங்களை குறைக்குமாறு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி, புதிய பேருந்து கட்டண விவரங்கள் இன்று வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டில்...

அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைக ளைப் பேணுதல் ஆகியவற்றின் நலன்களுக்காக இலங்கையில் பொது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதி தெரிவு போட்டி...

அழகப்பெரும, தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸநாயக்க ஆகியோர் போட்டியிட வுள்ளனர்.

இந்த நிலையில், இவர்கள் நால்வரும் இன்றைய தினம் பாராளுமன்றின் தலைமைச் செயலாளரிடம் தமது விருப்பத்தை தெரிவித்து வேட்பு மனுவைப் பெற்று அதனை நிரப்பி அவரிடம் வழங்குவார்கள்.

நான்கு பேர் போட்டியிடுவதால் ஜனாதிபதி பதவிக்கு உரியவரை தெரிவு செய்தற்கான வாக்கெடுப்பு நாளை புதன் கிழமை பாராளுமன்றத்தில் இடம் பெறும்.

இதனிடையே, தமக்கான ஆதரவு குறித்து வேட்பாளர்கள் கட்சிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர். பலரும் பல்வேறு அபிப்பிராயங்களையும் நிலைப்பாடுகளையும் கொண்டிருப்பதால் யார் வெற்றி பெறுவர் என்பதை ஊகிக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu







# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சரியான விசாரணை இல்லை

## ஒப்புக்கொண்டார் பதில் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, ஜூலை 19

**ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து சரியான விசாரணைகள் இன்மையால் இந்த பிரச்னை இன்னும் முழுமையாக தீர்க்கப்படவில்லை என பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

மே 13 ஆம் திகதி தாம் பிரதமராகப் பதவியேற்றபோது, நாளொன்றுக்கு 5 மணித்தியாலங்கள் மின்வெட்டு ஏற்பட்டதன் மூலம் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்ததாக பதில் ஜனாதிபதி விக்கிரமசிங்க விசேட அறிக்கையில் விளக்கமளித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அதன் பின்னர் இரண்டு மாதங்களில் மின்சாரம் 3 மணித்தியாலமாக குறைக்கப்பட்டு விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் எரிபொருள் விநியோகத்துக்கு கடினமான காலமாக இருக்கும். எவ்வாறாயினும், டீசல் இருப்புக்கள் பாதுகாக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. அதே நேரத்தில் ஜூலை 21 முதல் பெற்றோல் விநியோகிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நாட்டின் குடிமக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. 2 ஏக்கருக்கும் குறைவான வயல்களைப் பயிரிட்ட நெற்செய்



கையாளர்களின் கடன்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ள நிலையில், நாட்டிலும் எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன. வெளிநாடுகளுடனான உதவிக்கான கலந்துரையாடல்களும் முன்னேறி வருகின்றன.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் முழுமையற்ற தன்மை காரணமாக இங்கிலாந்து அரசாங்கம் மற்றும் அவர்களின் புலனாய்வுச் சேவைகளின் உதவியை கோரியுள்ளோம்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையே காரணம். பொதுமக்களின் பல பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் 19ஆவது திருத்தச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்.

நாட்டின் அமைதியை சீர்குலைக்க முயற்சிக்கும் சக்திகள் சமூகத்திற்குள் உள்ளன. இந்த கூறுகள் நாட்டின் முன்னேற்றத்தைச் சீர்குலைப்பதில் இருந்து தடை செய்யப்படும்.

நியாயமான கவலைகளைக் கொண்ட அமைதியான போராட்டக்காரர்கள் பிரச்னைகள், அவர்களுக்கான தீர்வுகள் கண்டுபிடிக்கப்படும்.

நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தனிநபரின் கருத்து வேறுபாடுகளால் நாடு பாதிக்கப்படுவதற்கு இடமளிக்கவேண்டாம். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் வகையில் அனைத்துக் கட்சி ஆட்சியை அமைக்க வேண்டும்- என்றார். (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 28 - 06 - 1937



மறைவு 15 - 07 - 2022

## கனகரட்ணம் ஆனந்தகுமாரராஜா

யாழ். கொக்குவில் தலையாழியைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் ஆனந்தகுமாரராஜா அவர்கள் 15.07.2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற சபாபதி கனகரட்ணம், இரட்ணாம்பிகை அம்மாள் தம்பதிகளின் ஏக புத்திரரும், சரவணமுத்து தங்கராஜா, நடேஷ்வரி தங்கராஜா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சர்வலோகேசுவரி அவர்களின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற பார்வதவர்த்தனி, பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜராஜேசுவரன், இரஞ்சி, ஜெயபாலேசுவரி, காலஞ்சென்ற இராமச்சந்திரா, குமரன், சந்திரிகா ஆகியோரின் மைத்துனரும், காந்தினி, குமுதினி, சபாபதி, ஆனந்தி, வேந்தன், லக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும்,முருகதாசன், ஜெயரஞ்சன், நிலானி ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,டினேஷ், பிரகாஷ், ஆதீஷ்வர், மனீஷ்வர், ஸ்ருதிகா, அரண், அக்ஷரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

கிரியை
Friday, 22 Jul 2022 8:30 AM - 10:30 AM
Bensham Hall 377 Bensham Ln, Thornton Heath CR7 7ER, United Kingdom

தகனம்
Friday, 22 Jul 2022 10:30 AM
Croydon Cemetery Mitcham Rd, London CR9 3AT, United Kingdom

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சபாபதி - மகன்.**

தொடர்புகளுக்கு:
**சர்வலோகேசுவரி - மனைவி** Mobile : +447981316196
**சபாபதி - மகன்** Mobile : +447941676210
**வேந்தன் - மகன்** Mobile : +447939855093
**ஆனந்தி - மகள்** Mobile : +12484109835
**காந்தினி - மகள்** Mobile : +442089077946

# தமிழ் புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையை மீளாய்வு செய்யுமாறு ரணிலிடம் கேட்டார் டக்ளஸ்

கொழும்பு, ஜூலை 19

தடை செய்யப்பட்டுள்ள தமிழ் புலம்பெயர் அமைப்புக் கள் மற்றும் முஸ்லிம் மக்கள் சார்பான அமைப்புக்கள் தொடர்பில் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார்.

பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இலங்கையின் சட்ட நியமங்களுக்கு உட்பட்டு சமூக நலத் திட்டங்களை மேற்கொள்ள விருப்பம் கொண்டுள்ள அமைப்புக்கள் தடை செய்யப் பட்டிருப்பின் அவற்றின் தடைகளை நீக்குவதன் ஊடாக நாட்டின் அபிவிருத்தி மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு? முற்போக்கு கூட்டணியின் முடிவு இன்று!

கொழும்பு, ஜூலை 19

புதிய ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்காக பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள வாக்கெடுப்பில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

இதற்காக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைமைக்குழு இன்று செவ்வாய்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு நுகேகொடை ஏகநாயக அவனியுவில் அமைந்துள்ள கட்சி செயலகத்தில் கூடவுள்ளது.

நாளை பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்கள் சமர்ப்பித்துள்ள அனைத்து வேட்பாளர்கள் தொடர்பிலும், கலந்துரையாடி இதன்போது முடிவெடுக்கும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் ஊடகங்களுக்கு தெரிவித்தார். (அ)

## நீராடிக்கொண்டிருந்த ஒரு வயது குழந்தை வாளியினுள் தவறி வீழ்ந்து உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 19

உடுகம, மஹவ பிரதேசத் தில் உள்ள வீடொன்றில் தனது இரு சகோதரர்களுடன் நீராடிக் கொண்டிருந்த ஒரு வயது குழந்தை வாளியினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹவ பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (அ)

## மட்டக்களப்பு பொது சந்தையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, ஜூலை 19

மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள நாவற்குடா பொதுசந்தை பகுதியில் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவர் சடலமாக நேற்று காலையில் மீட்கப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தை கட்டடத்துக்கு சம்பவதினமான நேற்று காலையில் வியாபாரத்துக்காக வந்தவர்கள் உயிரிழந்த நிலையில் சடலம் ஒன்று இருப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று விசாரணை செய்தனர். குறித்த நபர் 60 வயது மதிக்கத்தக்கவர். சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் பிரேத பரிசோதனைக்கு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
07.05 மணி : உளவியல் கருத்து - உளவள துணையாளர் யாழ் பாவாணன்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-திருப்புமுனை,பிரம்மன்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : சினிமா சினிமா
6.30 மணி : மூவி டோக்கீஸ் - வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி



10.00 மணி : BLACK AND WHITE

**DAN COMEDY HD**

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு